ஆரம்பக்கல்வி

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்,**

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 20 **செப்டம்பர் 1959** **இதழ் 9**

பாலுக்கும் காவல்! பூனைக்கும் தோழன்!!

தமிழ் நாட்டில் தொடக்கக் கல்வியானது வளர்ந்து ஓங்கிச் சிறந்து பொலிகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்தியாவில் உள்ள பிற பல மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் தொடக்கக் கல்வியானது, சீரும் சிறப்பும் மிகுந்ததாய், வலிவும் பொலிவும் நிரம்பியதாய், எழிலும் ஏற்றமும் நிறைந்ததாய்த் திகழ்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. நம் மாநிலத்தில் கூட, தொடக்கக் கல்வியானது, அது அடையவேண்டிய முழு வளர்ச்சியை இன்னமும் அடையவில்லை என்றாலும், இதுவரை அடைந்துள்ள வளர்ச்சியே நமக்கெல்லாம் பூரிப்பும் பெருமையும் அளிக்கத்தக்க பெற்றிமை படைத்ததாகும்.

தமிழ் நாட்டில் தொடக்கக் கல்வி இந்த அளவுக்கு உயர்வும் உன்னதமும் படைத்ததாகத் திகழ்கிறது என்றால், அதற்குரிய பெரு

மையில் பெரும் பகுதி தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கே உரியது என்பது—நாம் தெரிவிக்கும் செய்தியல்ல—நாடறிந்த உண்மை. நம் நாட்டின் முன்னேற்றம் கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்பதையும், கல்வியின் முன்னேற்றம் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியையே பொறுத்திருக்கிறது என்பதையும் நன்கறிந்து, இளம் பிள்ளைகளுக்கெல்லாம் ஆரம்பக் கல்வியை அள்ளி வழங்குவதற்காகத் தனியார் பலர் முதன் முதலில் பள்ளிகளைத் தொடங்கிய காலம், அரசாங்கத்தார்கூட ஆரம்பக் கல்வியைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படாத காலம்; உள்ளாட்சி மன்றங்கள் என்கிற அமைப்புகளே பல இடங்களில் இல்லாதிருந்த காலம்; இருந்த சில இடங்களிலும் ஆரம்பக் கல்வி பற்றி அக்கறை காட்டாதிருந்த காலம். அப்படிப்பட்ட காலத்தில்தான் பற்பல ஆன்றோரும் சான்றோரும் தைரியமாக முன் வந்து, துணிச்சலாகப் பள்ளிகளைத் தொடங்கி, எண்ணற்ற இடையூறுகளுக்கு இதையே தொடக்கக் கல்வியைத் திக்கெட்டும் பரப்பி வந்தனர். இந்தக் காலத்தில், கல்விப் பொருளின் அருமையையும் பெருமையையும், கற்றறிந்த பெரு மக்கள் மட்டுமல்ல, படிப்பறிவில்லாத பாமர மக்கள்கூட தெள்ளத் தெளிவாக உணர்ந்திருக்கின்றனர். வழக்கறிஞர்களும் டாக்டர்களும் பேராசிரியர்களும் பொறியியல் வல்லுநரும் மட்டுமல்ல-வண்டியோட்டும் வரதன்களும் விறகு பிளக்கும் வேலாயிகளும் கூட தங்கள் பிள்ளைகளும் பெண்களும் படித்துத் தேறிப் பட்டம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிற காலம் இந்தக் காலம். இத்தகைய காலத்தில் பள்ளிகளைத் தொடங்குவதும், தொடங்கிய பள்ளிகளுக்கு மாணவர்களைத் திரட்டுவதும் மிக எளிய செயல்களாகும். ஆனால் தனியார் துறையினர், தொடக்கப் பள்ளிகளை முதன் முதலில் தொடங்கிய அந்தக் காலம், கல்வி என்கிற சொல்லைக் கேட்டாலே நாட்டு மக்களில் மிகப் பலர் முகத்தைச் சுளித்து வாயைப் பிதுக்கி, கைகளைக் கொட்டிக் கேலி செய்து வந்த காலம். கல்வியாம் கல்வி—யாருக்கய்யா வேண்டும் கல்வி என்று கிண்டல் செய்து வந்த காலம். பள்ளிகளைத் தொடங்குவதும், தொடங்கிய பள்ளிகளுக்கு மாணவர்களைத் திரட்டுவதும் மிகக் கடினமான செயல்களாக இருந்து வந்த காலம். வீடு வீடாகச் சென்று, பெற்றோர்களைக் கெஞ்சிக் கூத்தாடி, இலவசமாகப் புத்தகம் தருகிறோம்—பலகை தருகிறோம் என்று ஆசை மொழி கூறி, பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கவேண்டிய நிலை இருந்த காலம். அடுக்கடுக்காகத் தோன்றிய இத்தனை ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் தனியார் பலர் அந்தக் காலத்தில் பள்ளிக்கூடங்களைத் தொடங்கியிராவிட்டால், இன்றையதினம் பெருமிதத்தோடு பேசுகிறோமே ஆரப்பக் கல்வி வளர்ந்து விட்டது வளர்ந்து விட்டது என்று, இந்தப் பேச்சை நாம் பேசியே இருக்க முடியாது.

அரசாங்கத்தினரும், நகராட்சி—மாவட்ட ஆட்சி மன்றத்தினரும், பற்பல தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியிருப்பது உண்மை தான். ஆனால் அந்த நிலை உருவாகியது பற்பல ஆண்டுகளுக்குப் பின்னல். முதலில் இந்தத் துறையில் இறங்கி, இணையற்ற பணி புரிந்து, கல்வி கற்கவேண்டும் என்கிற ஆர்வத்தை எங்கெங்கும் பரப்பியவர்கள் தனியார் துறையினரே ஆகும். அடர்ந்த காட்டுக்குள்ளே நுழைந்து, ஓங்கி நிற்கும் மரங்களை வெட்டி வீழ்த்தி, காடுமுரடான இடங்களைச் செப்பனிட்டு, புதியதோர் பாதையை உருவாக்குவது தான் மிக அரிய செயல். பாதை உருவாக்கப்பட்ட பிறகு ' பாண்டியாக் ' அல்லது ' ரோல்ஸ் ராய்ஸ் ' காரில் அமர்ந்து கொண்டு அந்தப் பாதைமீது உல்லாசப் பவனி வருவது அவ்வளவு கடினமான செயல் ஆகாது. பாதை அமைத்தவர்கள் தனியார் பள்ளியினர். அமைக்கப்பட்ட பாதை மீது ஆநந்தமாகப் பவனி வந்தவை உள்ளாட்சி மன்றங்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டிலேயே தொடங்கிவிட்டது தனியார் பள்ளிகளின் தன்னிகரற்ற தொண்டு.

இத்தகைய ஈடு இணையற்ற பணியை எழிலும் பயனும் மிக்க முறையில் நிறைவேற்றியிருக்கிற தனியாருக்குப் புகழ் மாலை சூட்டிப் பாராட்டுவது மட்டுமல்ல, நன்றிகூறி நல்ல உதவிகளையெல்லாம் செய்ய வேண்டியது நாட்டு நலம் நாடும் நல்லறிவாளர் அனைவரின் கடமையாகும். நல்லறிவாளர் தம் கடமை மட்டுமல்ல, அரசாங்கத்தின் கடமையும் அதுவே,

ஆனல் தமிழ் நாட்டின் கல்வி யமைச்சராகத் தற்போது வீற்றிருக்கும் உயர் திருவாளர் சி. சுப்ரமண்யனர் அவர்களோ நற்பணியாற்றியிருக்கும் தொடக்கப்பள்ளித் தனியார் துறையினருக்கு நன்றி கூருதது மட்டுமல்ல, அவர்கள்மீது இழி சொல்லையும் பழி மொழியையும் எடுத்து வீசத் தொடங்கி யிருக்கிருர்கள். இப்படிப் பட்ட ஒரு நிலைக்குக் கல்வி யமைச்சர் தன்னைத் தானே ஆளாக்கிக் கொண்டிருப்பதைக் காணும்போது நம்முடைய உள்ளம் வேதனை அடைவதில் வியப்பென்ன இருக்கமுடியும் ?

அண்மையில், தமிழ் நாட்டு சட்ட மன்றத்தில், மன்ற உறுப்பினர் சிலர், கல்வியமைச்சரைப் பார்த்து, " ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கட்கு அரசாங்கத்தினரே நேரடியாக ஊதியத்தை அனுப்பும் புதிய திட்டத்தில், மணியார்டர் கழிவுத் தொகையை, ஆசிரியரின் ஊதியத்திலிருந்து பிடிக்காமலிருக்க அரசாங்கத்தார் வழி செய்வார்களா ? என்று கேட்டிருக்கிருர்கள்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் நியாயப்படி அளித்திருக்கவேண்டிய விடை யாது ? மணியார்டர் கழிவுத் தோகையைப் பிடிக்காமலிருக்க ஒப்புக் கொள்கிறேம் என்று சொல்லியிருக்கலாம்.

அல்லது பிடிக்காமலிருக்க எங்களால் இயலவில்லை என்று தெரிவித்திருக்கலாம். இரண்டாவது வகை விடையைத் தெரிவித்திருந்தால், இன்னின்ன காரணங்களால் பிடிக்காமலிருக்க இயலவில்லை என்றும் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அமைச்சர் அவர்களோ இந்த இருவகை விடைகளில் எதனையும் அளித்தாரில்லை. அப்படி அளிப்பதற்கு மாறாக, இந்தக் கேள்விக்கு விடை தரவேண்டிய சந்தர்ப்பத்தைத் தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள்மீது இழிமொழி வீசுவதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்.

" இதற்கு முன்பு பல தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள், அதிகத் தொகை இரசீது பெற்றுக்கொண்டு குறைந்த தொகையை ஆசிரியர்களுக்கு அளித்துவந்ததாகப் புகார்கள் வந்ததால்தான் புதிய ஏற்பாடு செய்யப்பட்டது, முன்பு நிர்வாகிகள் பிடித்துவந்த தொகையைவிட நாங்கள் பிடிக்கும் மணியார்டர் கமிஷன் தொகை குறைவுதான் "

—இதுதான் அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விடை.

உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்ற விடையா இது? மணியார்டர் கமிஷனைப் பிடிக்காமலிருக்க வழி செய்யப்படுமா என்று உறுப்பினர்கள் கேள்வி கேட்டால், " தனியார் பள்ளியினர் பிடித்துவந்த தொகையைவிட நாங்கள் பிடிக்கும் மணியார்டர் கமிஷன் குறைவு " என்று கூறுவதற்குப் பெயரா விடை?

" உப்பு இருக்கிறதா—இருந்தால் என்ன விலை?" என்று கேட்ட வாடிக்கைக் காரரைப் பார்த்து " உப்பா வேண்டும் உனக்கு —செச்சே அது எதற்கப்பா உனக்கு—குப்பையில் வேண்டிய பண்டமல்லவா அது—பருப்பு இருக்கிறது—படி விலை ஒன்றரை ரூபாய்—வாங்கிக் கொள் " என்று கூறினாராம் ஒரு கடைக்காரர் இது ஒரு கதை! அமைச்சர் அவர்கள் கூறியுள்ள பதில், ஏறத்தாழ அந்தக் கடைக்காரரின் விடை போலவே இருக்கிறது. இது நம் நாட்டின் நிலை!!

" மணியார்டர் கமிஷனைப் பிடிக்காமல் முழு ஊதியத்தையும் ஆசிரியர்கட்கு அனுப்புவதாயிருந்தால், அரசாங்கத்திற்கு அதிகச் செலவு ஏற்படும். அவ்வளவு பெரிய செலவை ஏற்கக்கூடிய பொருள் வசதி அரசாங்கத்திற்கு இல்லை " என்று அமைச்சர் அவர்கள் கூறியிருந்தால் அந்த விடையை நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது என்றாலும் அது கண்ணியம் மிக்க விடையாக இருந்திருக்கும். ஆனால் அமைச்சர் அவர்களோ அத்தகைய நேரிய விடை எதனையும் கூறாமல் தனியார் நிர்வாகிகள் மீது பழிச் சொல் வீசியிருக்கிறார்.

தொடக்கக் கல்வியின் வளர்ச்சிக்காகத் தன்னிகாற்ற தொண்டாற்றியிருக்கும் தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவிக்கும் முறை இதுதானா என்று கேட்க விரும்புகிறோம்.

'நன்றி மறப்பது நன்றன்று' என்றார் பேரறிஞர் திருவள்ளுவர். ஆனால் அமைச்சர் அவர்களோ, தனியார், பள்ளியினர் ஆற்றியுள்ள நற்செயலை முற்றிலும் மறந்துவிட்டார். மறந்து மட்டுமல்ல, அவர்கள்மீது இழி மொழியையும் வீசியிருக்கிறார். முறையா இது? நியாயமான செயலா? ஆகுமா இப் போக்கு?

பல தனியார் பள்ளியினர் அதிகத் தொகைக்கு இரசீது பெற்றுக்கொண்டு குறைந்த தொகையை ஊதியமாகக் கொடுத்ததாகப் புகார்கள் வந்தன என்கிறார் அமைச்சர். புகார்கள் வந்திருக்கலாம் ஆனால் யாராவது ஏதாவது புகார் செய்தால் அதனை அப்படியே நம்பிவிடவேண்டியதுதானா? புகார்களில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? ஆராய்ந்து பார்க்காமலே வெறும் புகார்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு நேரடி ஊதியம் என்கிற புதிய திட்டத்தை உருவாக்கி நடை முறைக்குக் கொண்டுவந்து விடுவது முறையான செயல்தானா?

"முன்பு தனியார் நிர்வாகிகள் பிடித்துவந்த தொகையைவிட அரசாங்கத்தார் பிடித்துவரும் மணியார்டர் கமிஷன் தொகை குறைவுதானே" என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதைப் பார்க்கும்போது, அவரை நோக்கி வந்த புகார்களை உண்மையென்றே அவர் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அப்படி அவர் ஒப்புக்கொண்டது சிறிதும் முறையாகாது என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டியது நம்முடைய கடமையாகும்.

தனியார் பள்ளி நிர்வாகிகளில் யாரோ இரண்டொருவர் அமைச்சர் கூறியிருப்பதுபோன்ற இழிசெயலில் ஈடுபட்டிருக்கக்கூடும். இரண்டொருவர் தவறு செய்துள்ளனர் என்பதற்காக, மிகப் பலர் தவறு செய்துள்ளனர் என்று கூறுவது எப்படி நியாயமான பேச்சாகும்? அரசாங்கப் பணிமனைகளில் உள்ள அதிகாரிகளிற் கூடத்தான் சிலர் இலஞ்சம் வாங்கும் இழிமதி படைத்தவர்களாக உள்ளனர். அதற்காக, அரசாங்க அதிகாரிகளில் மிகப் பலர் இலஞ்சம் வாங்கும் பழக்கமுடையவர்களே என்று பேசிவிடுவது முறையாகுமா? இரண்டோர் நிர்வாகிகளின் தவறுக்காக எல்லா நிர்வாகிகளையும் நாணயமற்றவர்கள் என்று கூறுவது ஒருநாளும் நியாயமாகாது.

எந்தெந்த நிர்வாகிகள் தவறு செய்துள்ளார்களோ அவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிக்கட்டும் அரசாங்கத்தார். அத்தகைய

நிர்வாகிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கட்டும். அவர்களுடைய பெயர்களை வேண்டுமானாலும் சட்ட மன்றத்தில் வாசித்துக் காட்டட்டும். அப்படியெல்லாம் செய்வதுதான் முறையே தவிர, யாரோ ஏதோ புகார்க் கடிதம் எழுத, அந்தப் புகார்களை ஒரு காரணமாகக்கொண்டு மிகப் பல நிர்வாகிகள் நாணயமற்றவர்கள் என்பது போலப் பேசுவது, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு ஒரு சிறிதும் உதவி செய்யாது.

ஏற்கெனவே "கட்டணம் வாங்கும் பள்ளி அல்லது வாங்காத பள்ளி" என்கிற அரசாங்க உத்தரவின் காரணமாகத் தனியார் பள்ளி நிர்வாகிகள், தங்கள் பள்ளிக்கூடங்களையும் குடும்பங்களையும் நடத்துவதற்குத் தேவையான வருமானமின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். புதிய திட்டத்தின்படி அரசாங்கத்தார் அளிக்கக்கூடிய நிர்வாக உதவித் தொகையைக் கொண்டு கட்டிட வாடகையில் பாதியைக்கூடத் தரமுடியாதே—இந்நிலையில் முழு வாடகையை எப்படித் தருவது—ஏனைய செலவுகளுக்கு என்ன செய்வது குடும்பச் செலவுக்கு யாது புரிவது என்றெல்லாம் எண்ணி எண்ணி வேதனைத் தீயில் வெந்து கருகிக் கொண்டிருக்கின்றன தனியார் பள்ளி நிர்வாகிகளின் உள்ளங்கள். இந்த வேதனை போதாது என்றோ என்னவோ அமைச்சர் அவர்கள் பழிச்சொல் ஒன்றையும் வீசியிருக்கிறார்கள்! வெந்த புண்ணில் வேல் நுழைவது போன்ற வேதனைமிகு நிலை இது!

தனியார் பள்ளிகள் தொடர்ந்து இருக்கவேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்து விடட்டும் அரசாங்கத்தார். தனியார் பள்ளிகள் தேவையில்லை என்கிற முடிவுக்கு அவர்கள் வருவார்களானால் அதனை வெளிப்படையாகத் தெரிவித்து அந்தப் பள்ளிகளை மூடிவிடட்டும். அப்படியின்றித் தனியார் பள்ளிகள் தேவைதான் என்கிற முடிவுக்கு வருவார்களானால், அவற்றைத் தொடர்ந்து நடத்துவதற்குப் போதுமான அளவு பண உதவியும் பிற உதவியும் தந்து அவை செழித்து ஓங்குவதற்குத் உறுதுணையாக இருக்கட்டும். இந்த இரண்டு முடிவுகளில் எந்த முடிவுக்கும் வாரமல், தனியார் பள்ளிகளையும் வைத்துக் கொண்டு, அவற்றின் வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் திட்டங்களைத் தீட்டி பழிச்சொற்களையும் வீசிக் கொண்டிருக்கிறார்கள் அரசாங்கத்தார். "பாலுக்கும் காவல்—பூனைக்கும் தோழன் என்கிற இந்தக் கொள்கையைக் கையாள்வதால் அரசாங்கத்துக்கும் நன்மையில்லை; தனியார் பள்ளிகளுக்கும் வளர்ச்சியில்லை; ஆரம்பக் கல்வியின் செழிப்புக்கும் வழியில்லை.

வேண்டாம் இந்த விபரீதப் பாதை!

99 வயது இளைஞர்!

“ தங்களுக்கு வயது 99 ஆகியும் முழு மகிழ்ச்சியோடும் உடல் நலத்தோடும் வாழ்கிறீர்களே — அதன் இரகசியம் என்ன? மற்றவர்களும் அதே போல வாழ்வதற்கு வழி யாது?”

இவ்வாறு கேட்ட பத்திரிகை நிருபர்களைப் பார்த்து, தென்னகத்தின் முதுபெரும் பொறி இயல் அறிஞரும் அரசாங்க நிர்வாகத் துறை வல்லுநரும் ஆகிய **டாக்டர் விசுவேசுவரய்யா அவர்கள்** அளித்த விடை இது :—

“ நீண்ட நாள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமா? அப்படியானால்,

1. மனச் சான்றுக்கு மாறுபட்ட செயல் எதனையும் புரியாதீர்கள்.

2. எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருங்கள்.

3. அளவோடு உணவருந்துங்கள்.

4. நன்றாகத் தூங்குங்கள். ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் தூங்குங்கள். இரவில் தூங்காமல் இருக்காதீர்கள்.

5. குழந்தைகளோடு கொஞ்சி விளையாடுங்கள். இதனால் உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்ச்சி ஏற்படும்.

6. நன்றாக உழைத்துப் பொருள் ஈட்டுங்கள். வீண் பொழுது போக்குவதை விரும்பாதீர்கள்.

7. நீங்கள் தனியாக இருந்தால் திருமணம் செய்துகொள்ளுங்கள். திருமணமாகியருந்தால் மனைவியோடு மகிழ்ச்சியாக வாழுங்கள்.

இத்தகைய நல் விடையை அளித்துள்ள மூதறிஞர் டாக்டர் விசுவேசவரய்யா அவர்கள் தென்னகம் பெற்ற பெறற்கரிய செல்வங்களில் ஒருவராவர். தலைசிறந்த பொறியியல் வல்லுநராகிய அவர், 67 ஆண்டுகளுக்குமேல் தொடர்ச்சியாகப் பணிபுரிந்திருக்கிறார். 1884 முதல் 1908 வரை பம்பாய் அரசாங்கத்தின் பொறியியல் வல்லுநராகவும், 1909 முதல் 1912 வரை மைசூர் அரசாங்கத்தின் தலைமைப் பொறியாளராகவும் இருந்து அவர் ஆற்றிய பணிகள் வரலாற்றுச் சிறப்புடையவை. 1912 முதல் ஆறு ஆண்டுகள் மைசூர் திவானாக இருந்தபோது அவர் ஆற்றிய நற்பணிகளின் விளைவாகவே

மைசூர் மாநிலம் தொழில் வளம் கொழிக்கும் பூஞ்சோலையாக மாறிற்று என்று சொன்னால் அது வெறும் புகழ்ச்சியல்ல; முழு உண்மை.

மேட்டூர் அணைக்கட்டுத் திட்டம் தொடங்கப்படும்வரை இந்தியாவிலேயே மிகப் பெரிய அணைக்கட்டாகக் காட்சியளித்தது, மைசூரில் உள்ள கிருஷ்ணராஜ சாகர அணைக்கட்டுத் திட்டமே. அந்தத் திட்டத்தை உருவாக்கி நாட்டுக்கு அளித்த நல்லறிஞர், டாக்டர் விசுவேசுவரய்யா அவர்களேயாகும்.

மைசூர், ஐதராபாத், பம்பாய் ஆகிய மாநிலங்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன்பட்ட அவரது ஆற்றலும் அறிவும், பற்பல சமயங்களில், பரோடா, குவாலியர், இந்தூர் போபால், கோலாப்பூர் முதலிய சிற்றரசுகளுக்கும் பயன்பட்டிருக்கிறது. சுக்கூர், காகபுரி, பீஜபூர் முதலிய பல நகராட்சி மன்றங்களின் குடிதண்ணீர்த் திட்டங்கள் அந்த அறிஞர் பெருமகனால் வகுக்கப்பட்டவையே. பூனா, ஐதராபாத், மைசூர் முதலிய பல நகரங்களின் பாதாள சாக்கடைத் திட்டங்களும் அவருடைய நல்லறிவால் கிடைத்த நல்விளைவுகளே.

15-9-1861-ல் மைசூர் மாநிலத்தில் கோலார் மாவட்டத்தில் முதனஹள்ளி என்கிற சிற்றூரில் பிறந்த அவருக்கு இப்போது வயது 99 நெடுங்காலம் வாழ்க அந் நல்லறிவாளர் என வாழ்த்துகிறோம்.

பாட புத்தகங்கள் பிரசுரம்

சர்க்காரின் ஏகபோகம் கூடாது.

பாட புத்தகங்களைச் சர்க்காரே பிரசுரிக்கும் முறை ஆட்சேபகரமானது, அதைக் கைவிட வேண்டும் என்று பொது நலனில் அக்கறை உள்ளவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்த முறையினால் நன்மையைவிடத் தீமைதான் அதிகம் விளையும் என்பதைப்பற்றி விஷயமறிந்தவர்களுக்குச் சந்தேகமே இல்லை. சர்க்காரே ஏகபோக உரிமையுடன் பாட புத்தகங்களைத் தயாரித்து வெளியிடுவது மக்களின் கருத்துச் சுதந்தரத்தைப் பறிக்கும் செயல். இதைச் செய்ய

அவர்களுக்கு உரிமை இல்லை. சட்டப் பிரச்னை ஒருபுறமிருக்க சர்க்கார் சொற்படித் தயாராகும் பாடப் புத்தகங்களைத்தான் படிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது ஜனநாயக வாழ்வுக்கு ஒவ்வாத கொடுமை; மனித உரிமைகளுக்கு மாறுபட்ட நடத்தை. மற்றவர்களது புத்தகங்களுடன் சர்க்கார் தயாரிக்கும் புத்தகங்களும், சம வசதியுடன் போட்டி போடுவதாக இருந்தால்தான் இப்பணியில் அவர்கள் இறங்குவது பொருத்தமுள்ளதாக இருக்கும். ஏகபோகவுரிமையை வரித்துக்கொள்வது முற்றிலும் ஆட்சேபகரமானது.

சர்க்கார், அரசியல் கட்சிகள் மூலம் இயக்கப்படுவது. எனவே அதில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலும் புதிய புதிய வகையான புத்தக வெளியீடுகளை அவசியமாக்கலாம். கல்வி இலாகா டைரக்டர், மந்திரி மாறும் போது கூட இப்படியெல்லாம் நேரலாம். கண்கூடாகப் பலவிடங்களில் இதுதான் நடக்கிறது. ஆரம்பக் கல்வியை இம்மாதிரி ராஜீயச் செல்வாக்கிற்கு உட்படுத்துவது சமூகத்துக்குப் பெரிய தீங்கையே விளைவிக்கும். எனவே ஆரம்ப வகுப்புக்களுக்கான தமிழ் வாசகங்கள், 5-வது வகுப்புக்கான ஆங்கில வாசகம் ஆகியவை பற்றிய சென்னை சர்க்கார் உத்தரவு தாமதமின்றி ரத்தாவது தான் நியாயம். வேரில் விஷம் வார்க்கலாகாது.

முந்திய அனுபவங்கள் சர்க்காருக்குப் புகழ் தருவனவாக இல்லை. சென்னையிலும் ஆந்திராவிலும் இரண்டு ஸ்காட் நாவல்களைச் சுருக்கி எழுதி வெளியிட்டதன் அலங்கோலமும் பரிபாவமும் எல்லோரும் அறிந்தவையே. நல்லபடி சுருக்கி எழுதப்பட்ட நல்ல பதிப்புகள் இருந்துங்கூட தமக்கு வேண்டியவர்களை ஊக்குவித்து பிழைகள் மலிந்த ஆங்கில மொழியைப் படிக்கும் வகையில் புது சுருக்கத்தைத் தயாரித்து வெளியிடச் செய்து மாணவர்கள் தலையில் கட்டிய அட்டூழியம் சந்தி சிரித்தது. இதைப்பற்றி விசாரணைகூட நடந்ததாகத் தெரியவில்லை. இந்த அனுபவத்தை மறப்பதற்கில்லை. இதைவிட மோசமாகவே கீழ் வகுப்புகளுக்கான வெளியீடுகள் இருக்கக்கூடும். பாடப் புத்தகங்கள் நல்ல தரமுள்ளவையாகவும் கூடியவரை மலிவாகவும் இருக்கச் செய்வது அவசியமே. போட்டி தான் இதை உறுதி செய்யுமே தவிர சர்க்காரின் ஏகபோகமல்ல. பாடப் புத்தகக் கமிட்டி முறையில் கோளாறுகள் இருக்கலாம். அதைச் சரிப்படுத்த வழி வகை காணவேண்டியது அவசியம். சர்க்காரின் ஏகபோகம் அதற்குப் பரிகாரமாகாது.

தினமணி — 2—9—1959

சந்திரனில் மனிதன்

[விஞ்ஞானி என். பரபஷோவ்]

(கார்க்கோவ் வானாராய்ச்சி நிலையத்தின் தலைவர்)

மனிதன் இன்னும் சந்திரனுக்குப் போய்ச் சேரவில்லை. கட்டாயம் அங்குப் போய்ச் சேருவான் என்பதில் ஐயமில்லை. சமீப காலத்தில் சோவியத் விஞ்ஞானம் கண்டுள்ள பல சாதனைகளும் மனித குலத்தோருக்குப் புதியதோர் சகாப்தத்தைத் தோற்றுவித்திருக்கின்றன. அண்ட வெளியின் மர்மங்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. வான வெளியிலே பிரயாணம் செய்து பல்வேறு விண்கோள்களுக்கும் செல்ல வேண்டுமென மனிதன் கண்டு வந்த கனவுகள் பலவும் நனவாகும் காலம் நெருங்கி விட்டது.

சந்திரன்தான் நமது பூமிக்கு மிகவும் அருகாமையிலுள்ள கோள். ஆகவே இதுதான் மனிதன் அடியெடுத்து வைக்கும் முதலாவது அண்ட வெளிக் கோளாக இருக்குமென்பது தெளிவு. பூமியிலிருந்து சந்திரனுக்குப் பறந்து செல்வதற்கு அதிக நேரம் தேவையிராது. சுமார் 53 மணிகளில் போய்ச் சேர்ந்துவிடலாம். சந்திரனை ஆராய்ந்து வான நூல் அறிஞர்கள் எவ்வளவோ விஞ்ஞான விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். பூமியிலே நாம் அறிந்துள்ள நிலைமைகளிலிருந்து அறவே மாறுபட்ட நிலைமைகளையுடைய சந்திரனின் மேற்பரப்பிலே மனிதன் இறங்குவதற்குத் தேவையான தயாரிப்பு வேலைகளைச் செய்வதற்கு இந்த விவரங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

சந்திரனில் ஈர்ப்பு சக்தி பூமியிலுள்ளதைவிட ஆறு மடங்கு குறைவானது. ஆகவே பூமியில் 80 கிலோகிராம் எடையுள்ள ஒரு மனிதன் சந்திரனில் 13 கிலோகிராம் எடைதான் பெற்றிருப்பான்.

சந்திரனிலே இவ்வாறு எடை பெரிதும் குறைந்து விடுவதால், அண்ட வெளியிலே பிரயாணம் செய்ய விரும்பும் மனிதன் பூமியிலிருந்து புறப்படுவதைக் காட்டிலும் சந்திரனிலிருந்து புறப்படுவது பன்மடங்கு இலகுவாயிருக்கும். அண்ட வெளிக் கப்பல் பூமியின் ஈர்ப்பு சக்தியின் பிடியிலிருந்து விடுபட்டுப் பாய்ந்துக் கொண்டு அண்ட வெளிக்குள் தப்பிச் செல்ல வேண்டுமானால், அக்கப்பலுக்கு வினாடிக்கு 11 கிலோ மீட்டர் (சுமார் 6·88 மைல்) வேகம் அளித்தாக வேண்டும். ஆனால் சந்திரனுடைய ஈர்ப்பு சக்தியிலிருந்து விடுபட்டு வெளியேறி பூமிக்கும் இதர கோள்களுக்கும் செல்வதற்கு

அக்கப்பல் வினாடிக்கு 2·4 கிலோ மீட்டர் (1·5 மைல்) வேகம் பெற்றால் போதும். எனவே சந்திரன் மனிதனது அண்ட வெளி சஞ்சாரத்திற்கான மிகவும் வசதி வாய்ந்த வழி நிலையமாக அமையக் கூடியதென்பது தெளிவாகிறது.

சந்திரனுடைய பரப்பு பூராவும் ஒத்த வகையில் பிரகாசம் பெற்றிருக்கவில்லை. சிறிதும் பெரிதுமாகப் பல கரிய திட்டுகளும் ஒளி மிகுந்த புள்ளிகளும் அதன் பரப்பிலே தென்படுகின்றன. வெறுங் கண்களால் பார்த்தால் கூட இந்த விவரங்கள் புலனாகி விடுகின்றன. பெரிய கருந்திட்டுகள் யாவும் ஆழமான குழிகளாகும். இவற்றில் சொட்டுத் தண்ணீர்கூட இல்லையென்றாலுங்கூட இந்தப் பெருங் குழிகளைக் கடல்கள் என்று அழைக்கிறோம். சிறிய கரும் புள்ளிகள் யாவும் வளைகுடாக்கள், ஏரிகள், சதுப்பு வெளிகள் என்று பெயரிடப்பட்டுள்ளன. "கடல்"களைப் போலவே இவற்றிலும் தண்ணீர் கிடையாது. பிரகாசமான புள்ளிகள் மலைகளையும் எரிமலை வாய்களையும் குறிக்கின்றன.

சந்திரனின் பரப்பு பிரகாசமாகத் தெரியும் நேரங்களில் தொலைநோக்கிக் கருவியின் மூலமாகப் பார்க்கும்போது வட்டமான மலைத்தொடர்களுக்கு நடுவிலுள்ள பிரம்மாண்டமான கிணறுகள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. எரிமலை வாயினுள் ஆழமான கருங்குழி இருப்பது தெரிகிறது.

முதலாவது அண்ட வெளிப் பிரயாணிகளின் உபயோகத்திற்காக சந்திரனுடைய மேற்பரப்பை நன்கு அறிந்து பிழையற்றவாறு நிலப்படங்கள் தயாரிப்பது இப்பொழுது அவசியமாகியுள்ளது. சந்திரனுடைய பரப்பு சம்பந்தமாக நவீன காலத் தொலைநோக்கிக் கருவிகள் மூலம் கண்டறியக் கூடிய எல்லா விவரங்களும் இந்தப் படங்களில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். சந்திரனிலுள்ள மலைகளின் உயரம், குழிகளின் ஆழம், எரிமலை வாய்களின் சரிவைப் பற்றிய அளவுகள் போன்ற பல விவரங்களையும் இந்தப் படங்களில் குறித்தாக வேண்டும். சந்திரனில் இறங்குவோர் அவர்கள் எப்பகுதியிலுள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசமில்லாத ஏராளமான மலைகளிடையே வழி தவறிவிடுமென்ற அச்சமின்றி நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்கும் இந்தப் படங்கள் அவர்களுக்கு உதவி புரியும்.

சந்திரனிலுள்ள "கடல்"களைச் சேர்ந்த பெரும் பெரும் சம வெளிகள் தொலைநோக்கிக் கருவியிலே பார்க்கும்போது மேடு பள்ளங்களின்றி சமதளமாக இருப்பதாகத் தோன்றுகின்றன. உண்மையில் இவை ஏற்றத் தாழ்வுடையதாகவும் பஞ்சைப் போல் பொலபொலப்பாகவும் உள்ளன. சந்திரனின் பல்வேறு கட்டங்களின் போதும் அதன் பரப்பிலே ஒளியின் பிரதிபிம்பங்

களை ஆராய்ந்து இந்தக் கட்டுரையின் ஆசிரியர் இவ்விவரங்களைத் தெரியப்படுத்தியுள்ளார். சந்திரனது பரப்பு பூராவும் பொலபொலப்பானதே என்பதை பேராசிரியர் எ. வி. மார்க்கோவ் நிருபித்திருக்கிறார்.

சந்திரனில் காற்று மண்டலம் இல்லை என்பது ஆராய்ச்சிகள் மூலமாய்த் தெளிவாகியுள்ளது. எனவே விண் கற்கள் தடங்கலின்றி அதன் பரப்பிலே வேகமாக விழுகின்றன. இதனால் வெடி அதிர்ச்சி ஏற்பட்டு, இந்த விண் கற்களும், சந்திரனது மேற்பரப்பைச் சேர்ந்த பொருள்களில் ஒரு சிறு பகுதியும் ஆவியாக மாறி விடுகின்றன. இதன் விளைவாக உலோகக் கசடு போன்ற பொருக்கு உண்டாகிறது. லட்சோப லட்சக்கணக்கான ஆண்டுகளாக விண்கற்களும் அண்டவெளித் துகள்களும் சந்திரனது பரப்பின்மீது மோதி அதைத் துளைத்தும் தகர்த்தும் மேடு பள்ளங்களை ஏற்படுத்தி வந்துள்ளன.

அமெரிக்க வான நூல் அறிஞர்கள் சென்ற ஆண்டில் சந்திரனுடைய பரப்பைப் படம் பிடித்தார்கள். எரிமலை வாய்கள் சிலவற்றிலிருந்து வாயுக்கள் வெளிவரக் கூடும் என்பதற்கு இந்தப் படங்கள் ஆதாரமாக அமைந்தன. புல் கோவோ வானாராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த என். எ. கசுரேவும், கார்கோவ் வானாராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வி. ஐ. எஜர்ஸ்கியும் கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் அல்பான்சோ எரிமலைவாயை ஆராய்ந்து எதிர் பாராத பல உண்மைகளையும் கண்டு பிடித்தனர். நவம்பர் 3ம் தேதி மாஸ்கோ நேரம் 6 மணிக்கு அவர்கள் அல்பான்சோ எரிமலை வாயின் நிறமாலையைப் புகைப்படம் பிடித்தனர். அந்தப் படத்தில் பிரகாசமான ஒளிச்சுடர் தெரிந்தது. எரிமலை வாயிலிருந்து வெளிவந்த வாயுவின் ஒளியே இது. சந்திரனில் எரிமலை வெடித்துப் புகைவதை சோவியத் விஞ்ஞானிகள் படம் பிடித்துவிட்டனர் என்பது புலனாகியது. பூமியில் நடைபெறுவதைப் போலவே சந்திரனிலும் எரிமலைகள் வெடித்து அதன் மேற்பரப்பின் வடிவத்தை உருவாக்குவதில் பங்கு கொள்கின்றன என்று கருதுவதற்கு இந்த நிகழ்ச்சி இடமளித்திருக்கிறது.

சந்திரனிலுள்ள யதார்த்த நிலைமைகள் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்றவையல்ல. ஆகவே சந்திரனில் வளர்ச்சி யடைந்த உயிர் வகைகள் இருக்க முடியாது. கீழ் மட்டத்து உயிர் வகைகளில் கடினமான நிலைமைகளையும் தாக்குப் பிடிக்கவல்லவை சில அங்கு இருக்கக் கூடும். இதுவுங்கூட மிகவும் துர்லபமானதே.

சந்திரனின் மேற்பரப்பில் மனிதன் எத்தகைய நிலைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்?

முதலாவதாக அண்ட வெளிக் கப்பலிலிருந்து சந்திரனில் மனிதன் கீழே இறங்கும் பொருட்டு காற்று அழுத்தத்தோடு கூடிய

விசேஷ கவச உடைகள் அணிந்திருக்க வேண்டும். அநேகமாகக் காற்றே இல்லாத சந்திரமண்டலத்தின் மிகவும் குறைவான அழுத்தத்தினால் ஏற்படக்கூடிய அபாயங்களிலிருந்து அப்பொழுதுதான் அவன் பாதுகாப்பு பெற முடியும். சுவாசிப்பதற்காக அவன் பிராணவாயு எடுத்துச் சென்றாக வேண்டும. மலைகளின் நிழலிலுள்ள சந்திர வெளிகளில் சென்று அவற்றை ஆராயும் போது மனிதனுக்கு ஏற்ற வெப்ப நிலை அவன் உடைகளுள் இருக்கும்படி ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய வெப்பக் கட்டுப்பாடு அமைப்புகள் அவன் உடைகளில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். சந்திரனில் வெயிலுள்ள இடங்களில் இருக்கும் வெப்ப நிலைக்கும் நிழலான இடங்களில் இருக்கும் வெப்ப நிலைக்கும் பெருமளவு வித்தியாசம் இருக்கும்.

சந்திரனில் நிரந்தர நிசப்தம் நிலவுகிறது. அங்கு காற்று மண்டலம் இல்லையாதலால் பூமியைப் போல அங்கு சப்தங்கள் பரவ வழியில்லை. ஆதலால் சந்திரமண்டல ஆராய்ச்சியாளர்கள் அவர்களுடைய தலைக் கவசங்களினுள் சின்னஞ்சிறு ஒலி செலுத்தி சாதனத்தையும் ஒலி வாங்கி சாதனத்தையும் வைத்திருந்தாலொழிய ஒருவரோடொருவர் பேசிக் கொள்ள முடியாது.

சந்திரனில் வைகறைப் பொழுதும் மாலைப் பொழுதும் கிடையாது. பகல் திடீரென இரவாகவும், இரவு திடீரென நொடிப் பொழுதில் பகலாகவும் மாறி விடுகின்றன. குன்றுகளின் நிழல்கள் மையிருட்டாகவும் தெளிவான வரையறுப்புகளுடனும் தென்படும். பூமியில் நாமறிந்த சாம்பல் நிறங்களையும் வெளிர் நிறங்களையும் அங்குக் காண இயலாது. அங்கு காற்று மண்டலம் இல்லாததே இவை யாவற்றிற்கும் காரணம். சந்திரனின் குன்று ஒன்றின் நிழலினுள் புகுந்து விட்ட ஒருவரை அவருக்குப் பக்கத்திலே நிழலுக்கு வெளியே நிற்கும் வேறொருவர் பார்க்கவே முடியாது.

வானம் கரிபோல் கருத்திருக்கும். நீலமாயிராது. வெயில் கண்களைத் தீய்ப்பதுபோலப் பிரகாசமாயிருக்கும். வெயிலின் கடுமையைக் குறைப்பதற்கு வானத்தில் மேகங்களே இருக்கமாட்டா. வெறுங் கண்ணால் பார்க்கும்போதே சூரியனும், அதைச் சுற்றிலுமுள்ள செந்நிற ஒளிவட்டமும், ஒளி மயமான உச்சிகளும் தெளிவாகத் தெரியும். சூரிய வட்டம் அளவு கடந்த பிரகாசமுடையதாய்த் தோன்றும்.

பகல் பொழுதிலுங்கூட, வானத்திலே புள்ளி புள்ளியாக நட்சத்திரங்கள் தெரியும். கண் சிமிட்டாத நட்சத்திரங்கள் இவை. சந்திரனிலிருந்து பார்க்கும் மனிதனுக்கு நமது பூமி, இங்கு பூமியின் வாசத்திலே தெரியும் சந்திரனைவிட 13·7 மடங்கு பெரியதாயுள்ள பிரகாசமான

கோளமாகத் தெரியும். பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள் வதை எவ்வித தொலைநோக்கிக் கருவியுமின்றி அங்கிருந்து தெளி வாகப் பார்க்கலாம்.

நட்சத்திரப் புள்ளிகளிடையே வானில் சூரியன் மெள்ள ஊர்ந்து சென்று 15 நாட்கள் வரை அடி வானத்திற்கு மேலே தெரிந்து கொண்டிருக்கும். அதன் பின் 15 நாட்கள் வரை வெளியே தலைகாட்டாமல் அடிவானத்திற் குக் கீழே மூழ்கிக் கிடக்கும். நமது பூமி சந்திரனுடைய வானத்திலே ஒரே இடத்தில் அப்படியே நிலையாகத் தெரியும். அதிர்வு காரணமாய் பக்கவாட் டில் ஓரளவு ஆடுவதைத் தவிர்த்து வேறு அசைவே இல்லாமல் வானத்திலே தோற்றமளிக்கும். சந்திரனின் எதிர்ப்புறத்தில் பூமி என்றுமே கண்ணுக்குத் தெரி யாது. ஏனெனில் சந்திரன் எப் பொழுதும் நமக்கு ஒரு முகத்தை மட்டும்தான் காட்டுகிறது. பூமி யிலிருந்து பார்க்க முடியாத சந் திரனது மற்றொரு பக்கத்தை அண்டவெளி யாத்திரிகர்கள் ஆராய்ச்சி செய்தாக வேண்டும். சந்திரனுடைய இந்த எதிர்ப் பக் கத்தைப்பற்றி இன்று நமக்கு எதுவுமே தெரியாது.

மேகங்களால் மூடி மறைக்கப் படாத பிரகாசமான சூரியன் தொடர்ந்து ஆகாயத்திலே ஒளி விடுவதால், சந்திரனில் மனிதன் எந்நேரமும் சூரிய ஒளி மின்க லங்களை உபயோகித்து மின் சாரம் உற்பத்தி செய்ய முடியும். பிரயாணத்திற்காகவும் சந்திர னது நிழல் பரப்புகளை வெளிச் சப்படுத்துவதற்காகவும் மனிதன் இந்த மின்சாரத்தைப் பயன்படுத் திக் கொள்வான்.

பூமிக்கு முதன் முதலாக செயற்கை உபகிரணங்களைப் படைப்பித்துள்ள சோவியத் விஞ்ஞானிகளுடைய முயற்சி களின் பயனாய் அண்ட வெளிப் பிரயாணங்களுக்கான காலம் ஆரம்பமாகி விட்டது. மனிதன் சந்திரனுக்குச் சென்று வரும் காலம் தொலைவில் இல்லை.

கொய்த மலர்கள்

அன்பெனும் நெய் பெய்து, ஆதாரவெனும் திரியிட்டு, இன் மொழி எனும் தூண்டு கோலால் தூண்டி விட்டு, ஒளியை இல்லத்தில் பெற உதவும் அகல், மனைவி.

மற்ற விஷயங்களைப்பற்றி பேசுவதிலே நாவுக்கரசர்களாக இருந்தாலும் மூடக் கோட்பாடுகளைத் தகர்க்கப் பிரசாரம் புரியாதவர் களை நான் நாக்கிழந்தார் என்றே கூறுவேன்.

நகைச்சுவை நிகழ்ச்சிகள்

[அன்புப் பழம் நீ]

தாத்தா

பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரைப்பார்த்து ஒரு கிழவர், தாம் தம் பேரப்பிள்ளையைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். "இங்கு உட்காருங்கள். இதோ வேலைக்காரனை விட்டு வரவழைக்கிறேன்" என்று தலைமை உபாத்தியாயர் வேலைக்காரனை அனுப்பினார். சற்று நேரத்திற்கெல்லாம் வேலைக்காரன் திரும்பி வந்தான். "என்னங்க! அந்தப் பையனுடைய தாத்தா செத்துப்போய் விட்டாராம். அதற்காக பையன் வரவில்லையாம்" என்று சொன்னான்.

வைத்தியர்

சாலை வழியாக வெகு வேகமாக மோட்டார் ஓட்டிக்கொண்டு வந்த ஒருவர் வழியில் ஒருவர் மீது மோதி விட்டார். வேடிக்கை பார்க்கக் கூட்டம் கூடிவிட்டது. மோட்டார் ஓட்டிக்கோ ஆத்திரம் தாங்கமுடியவில்லை. "எதற்காக அப்படிக் கூட்டம் போடுகிறீர்கள்? யாராவது போய் வைத்தியரை அழைத்து வாருங்களேன்" என்றார். "அடிபட்டுக் கிடக்கிறாரே, அவர்தான் இந்தப் பக்கத்துக்கு ஒரே வைத்தியர்" என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

விந்தை!

ஒரு கட்டுரையாளர் தாம் அனுப்பிய கதை பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதா என்று விசாரித்து ஒரு பத்திரிகையின் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். வெகு நாள் பதிலே வரவில்லை. அதற்காக ஒரு இரண்டாம் கடிதம் எழுதி அத்துடன் தம் விலாசமிட்ட ஒரு தபால்கவரை வைத்து அனுப்பினார். அடுத்த தபாலில் அதற்குப் பதில் வந்தது. "தாங்கள் விலாசமிட்ட தபால் கவர் கிடைத்தது. பதில் எழுத ஒரு காகிதம் அனுப்பி வைக்கவும்" என்று அதில் எழுதியிருந்தது.

புது வீடு

குடிவருகிறவர்: "பழைய வீட்டில் சாக்கடை நாற்றம் பொறுக்காமல்தான் நான் இந்த வீட்டிற்குக் குடிவருகிறேன்"

வீட்டுக்காரர்: "அந்தக் கவலை உங்களுக்கு இனி வேண்டாம். இந்த வீட்டில் சாக்கடையே கிடையாது"

திருப்பி அடிப்பாள்!

மனைவி கணவனைக் கடையிலிருந்து ஏதாவது ஜாக்கெட் துணி வாங்கிக் கொண்டு வரும்படி சொல்லியிருந்தாள். கணவன் கடைக்குப்போய் ஜாக்கெட் துணி கேட்டான். கடைக்காரர் "என்ன விலை, என்ன நிறம்?" என்று எல்லா விவரங்களும் விசாரித்தார். அதற்கு கணவன் "ஏதாவது ஒன்றைக் கொடுங்கள். நான் எதை வாங்கிக் கொண்டு போனா

னும் என் மனைவி திருப்பியடிக்கப்போகிருள்'' என்ருன்.

பென்சில்!

பௌண்டன் பேனுவைத் தம் பையன் விழுங்கி விட்டதாக ஒருவர் டாக்டருக்கு போன் பண்ணினுர். "நான் இன்னும் கால்மணி நேரத்தில் வருகிறேன்—அதுவரையில் என்ன பண்ணப் போகிறீர்கள்?" என்றுகேட்டார் டாக்டர். "அதுவரை பென்சிலால் தான் எழுதப் போகிறேன்'' என்று அவர் பதிலளித்தார்.

பத்து ரூபா!

ஒரு கோடீசுவரர் ஒரு பெரிய வாசகசாலைக்குள் தம் அமைச்சருடன் நுழைந்தார். அவர் வாயில் புகைந்துகொண்டிருந்த சிகரெட்டைப் பார்த்துவிட்டு, அங்கிருந்த சிப்பந்தி "சார்! இங்கு புகை பிடிக்கக்கூடாது. பிடித்தால் ஐந்து ரூபாய் அபராதம்" என்ருர்.

"அப்படியானுல் இந்தா பத்து ரூபாய், மீதிகொடு" என்று கோடீசுவரர் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினுர்.

"சில்லறை இல்லையே" என்ருர் சிப்பந்தி.

உடனே கோடீசுவரர் தம் அமைச்சரைப் பார்த்து "அப்படியானுல் நீரும் ஒரு சிகரெட்டைப் பிடியும்'' என்று அமைச்சருக்கு ஒரு சிகரெட்டு கொடுத்தார்.

அப்பாவுக்கு அனுப்பிய பரிசு

திடீரென்று ஒரு நடிகனுக்கு யோகம் அடித்தது. ஒருபடத்தில் நடிப்பதற்கு அவனைக் கொழுத்த சம்பளத்தில் அமர்த்திக் கொண்டார்கள். அவனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அப்பாவுக்கு ஒரு காஷ்மீர் சால்வை 200 ரூபாயில் வாங்கினுன். வாங்கிய பிறகு அவனுக்கு ஒருபயம் பிடித்தது. விலை அப்பாவுக்குத் தெரிந்தால், "200 ரூபாயா!" என்று அவர் மூர்ச்சை போட்டு விழுந்து விடுவார். ஆகவே, சால்வையோடு கூட அதன்விலை ரூபாய் 50 என்று குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுதி அதையும் சேர்த்து அவருக்கு அனுப்பினுன்.

பதிலை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். நாலைந்து நாளில் அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. "உடனே இதேமாதிரி இன்னும் 6 சால்வைகள் அனுப்பு. அவைகளுக்கு நல்ல கிராக்கி வந்திருக்கிறது. முதலில் நீ அனுப்பிய சால்வையை 75 ரூபாய்க்கு விற்றுவிட்டேன்'' என்று எழுதியிருந்தார் அப்பா!

—"தனி அரசு

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

காட்சி 42

கம்பெனி முகாம்

ஒரு கூடாரத்தில்......

(கர்னல் அக்நியு, புதுக்கோட்டை தொண்டைமான், படமாத்தூர் தேவர் மூவரும் உள்ளனர். மகம்மதுகலீல் கை கட்டிக் கொண்டு நிற்கிறான்.)

தொண்டைமான் :—(கர்னலை நோக்கி) உண்மைதான், சார்! பாதி ராத்திரியில் மருது பாண்டியர் சிறையிலிருந்து தப்பியோடி விட்டதாகக் கனவு கண்டேன். அதற்குப் பிறகு தூக்கமே வரவில்லை. எங்கள் மாளிகையின் தூணைப் பார்த்தாலும் துரும்பைப் பார்த்தாலும் அந்தப் பயலைப் பார்ப்பதைப் போலவே பிரமைதட்டியது.

தேவர் :—தூக்கத்தின்போது கூட மிரண்டு மிரண்டு வாய் வெருவிருங்க......

அக்நியு :—(சிரித்து) இன்னுமா, மிஸ்டர் புதுக்கோட்டை, அவர்களை நினைத்துப் பயப்படுகிறீர்... அவர்கள்தான் சிறையில் இருக்கிறார்களே...

தொண்டை :—அதென்னவோ, சார்! எமனே எதிரில் வந்தால் கூட பயப்படமாட்டேன். அந்த அயோக்கியப் பயலுகளை நினைச்சாலே 'பகீ'ரென்கிறது......

தேவர் :—அத்தாட்சிக்குப் பாருங்களேன்... அவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே புதுக்கோட்டையாருக்கு வியர்வை விட்டு, சட்டையெல்லாம் நனைந்து விட்டது......

(அனைவரும் சிரிக்கின்றனர்.)

தொண்டை :—எனக்குத் தெரிந்தது... அவர்கள் உடலை அணு அணுவாக வெட்டிச் சிதைக்க வேண்டும், சார்...!

அக்நியு :—உடலைச் சிதைப்பதைவிட, உள்ளத்தை வெட்டிச் சித்திரவதை செய்யவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அண்ணனையும் தம்பியையும் ஒன்றாக சந்திக்க வைப்போம்...... அவர்கள் படும் வேதனையை நாம் மறைந்து நின்று ரசிப்போம்... வாருங்கள்!

(அனைவரும் புறப்படுகின்றனர்.)

— **திரை** —

காட்சி 43

சிறைக்கூடம்.

(துப்பாக்கி தாங்கிய நான்கு வீரர்கள், பெரிய மருதுவைக் கை விலங்குடன் அழைத்து வந்து... சின்ன மருது இருக்கும் அறையைத் திறந்து விடுகின்றனர். **சின்ன மருது வைராக்கியமான மனத்துடன் கடைசிவரை தன் அண்ணனைத் திரும்பியும் பார்க்கவில்லை......** *பெரியமருது தன் தம்பியின் நிலை கண்டு கதறிக்கதறி அழுகிறான்! தொண்டைமான், தேவர், அக்நியு மூவரும் சுவர் மறைவில் நின்று அவர்களுடைய உரையாடலைக் கவனிக்கின்றனர். அக் கொடியவர்களின் முகம் படிப்படியாக மாறுபடுகின்றது.)*

பெ. மருது :—தம்பி... தம்பி!! காணக் கண் கூசும் இந்த இழிவான நிலையிலாடா நான் உன்னைக்காண வேண்டும்...... தீராதி தீரனை நீ, சிறகொடிந்த பறவையாக செயலிழந்து கிடக்கும் இந்த நிலையிலாடா நான் உன்னைப் பார்க்க வேண்டும்?

சி. மருது :—(அண்ணனைத் திரும்பிப் பார்க்காமலேயே, விசும்பலுடன்) சும்மா இருங்கள், அண்ணா...! வீரத்திற்குப் பேர்போன நாம் இருவரும் இப்படி வெந்துபோன இதயங்களால் பேசிக் கொள்வதை யாராவது பார்த்துட்டால், நம்மை கேலிக் குரியவர்களாக நினைத்து விடப் போகிறார்கள்......

பெ. மருது :—குழம்பிக் கிடக்கும் என் இதயத்தைக் கொடியவர்களின் மத்தியில் காட்டிக் கொள்ளக் கூடாது என்று தானடா எண்ணுகிறேன். ஆனால், பொறுக்க முடியவில்லையே என்

ளுல்...... உன் ஒடிந்துபோன காலைக் காணும்போது பேசாமல் இருக்க முடியவில்லையே, என்னுல்......

சி. மருது :—கூற்றுவனையும் ஒழித்துக் கட்டுவீர்களே, அண்ணு... கூர் வாள் ஒன்றைக் கையில் கொடுத்தால்...... நீங்களா இப்படி பேசுகிறீர்கள்?

பெ. மருது :—ஆமாம், தம்பி! நானே தான் பேசுகிறேன். மதமேறிய மனம் எங்கே...... காட்டிக் கொடுக்கும் கயமைக் குணம் எங்கே...... சூது எங்கே...... வாது எங்கே...... சூழ்ச்சியும் பொருமையும் எங்கே எங்கே என்று உன் காதிலே துள்ளி விளையாடிக் கொண்டிருக்குமே வேலும் வாளும்...... அவற்றை இழந்துவிட்டு இங்கே வீணர்கள் பூட்டிய விலங்குடன் சுத்த வீரனுகிய நீயே நிற்கும்போது நான் வேறு எப்படியடா பேச முடியும்......?

சி. மருது :—(கசிந்துருகும் இதயத்துடன்) அண்ணு! ஏன் அண்ணு என்னைப் பார்க்க வந்தீர்கள்? ஏற்கனவே, நீங்கள் பிடிபட்ட செய்திகேட்டு மனம் பொருமிக் கிடக்கும் என்னுல் தங்களிடம் பேசவே முடியவில்லையே......

பெ. மருது :—என்னிடம் பேசவேண்டாம்...... இப்படி திரும்பி உன் வீரத் திருமுகத்தை எனக்குக் காட்டு, தம்பி! என் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீராவது ஒரு கணம் நிற்கட்டும்!

சி. மருது :—வேண்டாம், அண்ணு! என்னை அன்போடு மன்னித்து விடுங்கள். பகைவர்களை ஒழிப்பேன் என்று வாளெடுத்து சூளுரைத்தபடி, வெற்றித் திருமுகத்தைக் காட்டாமல் இப்போது வகை கெட்டு செயலற்று நிற்கும் உங்கள் தம்பியின் களையிழந்த முகத்தை நீங்கள் பார்க்கவே வேண்டாம், அண்ணு!

பெ. மருது :—என்ன தம்பி......! நன்றியைக் கொன்றவர்...... நயவஞ்சகர்...... புறங்கூறுபவர்...... புன்மை இருள் சூழ்ந்த மனம் படைத்தவர்...... திருடர்...... தீயவர் எல்லாம்கூட ஒருவரை ஒருவர் சிரித்த முகத்துடன் பார்த்துக் கொள்கின்றனர்......! நாம் அறிவுக்கொவ்வாத எந்தக் காரியத்தையடா செய்துவிட்டோம்...... நீ என்னைப் பார்க்க வெட்கப் படுகிறுய்......?

சி. மருது :—(தத்தளிப்புடன்) அண்ணு! நான் உங்களிடம் ஆயிரம் ஆயிரமாகப் பேச வேண்டும் என்றுதான் என் இதய

எண்ணுகிறது; ஆனால், என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை! கோடி கோடியான விஷயங்களைக் கூறவேண்டும் என்றுதான் என் நாக்கு ஆசைப்படுகிறது; ஆனால், அதனால் இப்படி அப்படிக்கூட புரளமுடியவில்லை! கொள்ளை கொள்ளையாகப் பேசி மனத்துயரை ஆற்றிக் கொள்ளவே நினைக்கிறேன்; ஆனால், நினைவு வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடமுடியாமல் அடித்துச் செல்லப்படுகிறேன்! கோரரூபத்துடன் கொதித்தெழுந்து என் உயிரை அரித்துக் கொண்டிருக்கும் சுதந்திர தாகத்தால் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறேன்...... அண்ணா!

பெ. மருது :—(இடை மறித்து) போதும், தம்பி...... நிறுத்து......! ஊமைத்துரையை இழந்தேன். நம் உயிரினும் இனிய உன் புதல்வர்களான சிவஞானம், துரைசாமியை இழந்தேன். பசியும் பட்டினியும் பாராது இரவு பகலாகப் போரிட்ட மறவர் குல திலகங்களை இழந்தேன். அனைவரும் சிறையில் வாடுகின்றனர்! விடுதலைப் பட்டாளத்தின் முன்னோடியான முத்தய்யன் முடிவை அறிந்தேன்...... கயவன் குண்டடிப்பட்டு களத்தில் உயிர்விட்ட கண்ணம்மாவின் சாவையும் உணர்ந்தேன். பொன்னை உன் உள்ளம் மண்ணாசை கொண்ட மடையர்களால் புண்ணாகப் புலம்புவதையும் கேட்கிறேன். இவற்றிற் கெல்லாம் இளகாத என் இதயம் தானடா, உன் முகத்தைக் காட்டமாட்டேன். என்று நீ கூறும் போது அனல்பட்ட மெழுகாய் உருகுகிறது...... எதற்கும் கலங்காத என் கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்து ஆறாகப் பெருகுகிறது!

சி. மருது :—முடிவாகச் சொல்கிறேன், அண்ணா! முடியுடை வேந்தர்களையும் புறமுதுகிட்டு ஓடச் செய்யும் வெற்றி வீரரான தங்கள் வீரத்திரு மார்பு வெறிச் சோடிக் கிடப்பதை, அஞ்சா நெஞ்சுடன் நிமிர்ந்து நிற்கும் தங்கள் நெடிய திருவுருவம் குணக் கேடர்களால் குன்றியிருப்பதை நான் பார்க்கவே மாட்டேன்......! பார்த்தால், என் கண்கள் அவிந்துவிடும்...... என் உயிர் என்னை விட்டுப் பிரிந்துவிடும்...... அண்ணா...... ஏதோ நப்பாசையால் நான் இப்படிப் பேசவில்லை. என் எண்ணத் திரையில் தாங்கள் எப்போதுமே சுத்த வீரராக...... மலையையும் தகர்த் தெறியும் மாபெரும் வீரராக...... சூழ்ச்சி தனை வஞ்சகத்தைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும் மாண்பு மிக்க வீரராகவே இருக்க வேண்டும்! வேறு எந்தக் கோலத்திலும் நான் உங்களைப் பார்ப்பதற்கு சம்மதிக்க மாட்டேன், அண்ணா...... சம்மதிக்கவே மாட்டேன்...... அண்ணா......!

பெ. மருது :—சிவகெங்கைச் சீமை பறிபோனதைப் பற்றிக்கூட நான் கவலைப்பட வில்லை, தம்பி! அது தீயோர் இழைத்த கொடுமையால் வந்த வினை. ஆனால், என் சிந்தை நிறைந்த தம்பியாகிய நீ......

சி. மருது :—இரத்தமும் தசைப் பிண்டமும் சேர்ந்த இந்த அழியக் கூடிய எலும்புக் கூட்டிற்கா, அண்ணா...... கவலைப்படுகிறீர்கள்......? அழியும் இந்த உலகத்தில் அழியாத புகழும்...... விண்ணும் மண்ணும் வியந்து போற்றும் தமிழர் பண்பும்...... நமது பிறப்புரிமையான சுதந்தர வாழ்வும் மாய்ந்துவிட்ட பிறகு, நீங்கள் ஏன் அண்ணா பந்தத்தை நினைத்து பாசத்தை நினைத்துப் பாதவிக்கிறீர்கள்......?

பெ. மருது :—(மெல்ல நகைத்து) என் ஐந்து மனைவிகளையும் நான்கு பெண்களையும் நினைத்து அழாத மனம்தானடா உன் ஒருவனுக்காக அலமந்து வாடுகிறது! மற்றபடி, பரங்கிக்காரர்கள் நமக்கு என்ன தண்டனை கொடுத்து விடுவார்களோ என்று நான் ஒரு சிறிதும் அஞ்சவில்லை, தம்பி......!

(சின்ன மருதுவின் முறிந்த தொடையை, மண்டியிட்டுப் பற்றிக் கொள்கிறான்.)

சி. மருது :—அண்ணா! என்னால் அதிக நேரமாக நிற்க முடியவில்லை. நீங்கள் செல்லுங்கள், அண்ணா......! ஒரு வேளை நான் இறக்க நேரிட்டால், அடுத்த சென்மம் என்று ஒன்று இருந்தால்...... தமிழகத்தில் தமிழனாகவே பிறப்பேன்! அதுவும் தங்கள் தம்பியாகவே பிறப்பேன், அண்ணா...... தவிர்க்க முடியாத என் ஆவல் இது ஒன்றுதான்...... அண்ணா......

(பெரிய மருது சற்று நேரம் இருந்து, தம்பியின் தொடையில் கட்டப்பட்டுள்ள காயத்தைத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு, வேதனையைக் கக்கும் விழிகளோடு மெல்ல வெளியேறுகிறான். அவன் மறைந்த பிறகு, சின்ன மருது தமையன் சென்ற திக்கு நோக்கியபடியே, மூடப்பட்ட சிறைக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, தரையில் சாய்கிறான். அவன் இதழ்களுக்கிடையில் 'அண்ணா... அண்ணா' என்ற சொற்கள் ஈனக் குரலில் இழையோடுகின்றன.)

தூரத்தில் நின்று இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அக்நியு துரை, வேதனையுடன் தொண்டைமானைத் திரும்பிப் பார்க்கிறான். தொண்டைமான், தன் விழிகள் சிந்திய நீரை விரலால் அகற்றுகிறான். படமாத்தூர் தேவர் துயரம் தோய்ந்த தன் முகத்தைத் தொங்கவிடுகிறார்.)

— திரை —

காட்சி 44

ஒரு மாளிகை.

(படமாத்தூர் தேவரும் தொண்டைமானும்.)

தேவர் :—என் இரும்பு நெஞ்சத்தையும் இளக்கிவிட்டது, அந்தக் காட்சி!

தொண்டை :—அதை ஏன் மீண்டும் நினைவு படுத்துகிறீர்கள்...... என்னால்கூட துக்கத்தை அடக்கவே முடியவில்லை. விழிகள் சிந்திய நீருடன் வெள்ளைக்காரனை நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல் திணறிவிட்டேன்!

தேவர் :—நம்மைப்போல கூலிக்கு வாங்கப்பட்ட அன்பா, அது...? இல்லையே......! இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து உணர்வோடு உணர்வாக இழையோடிய பாசமல்லவா? அதனால்தான் அவர்களுடைய ஊனும் உயிரும் உருகி வழிந்தது.

தொண்டை :—என் பகைமைப் புகை கூட எங்கேயோ போய்விட்டது, தேவரே! நெஞ்சம் நெகிழ்கிறது, அவர்கள் படும் வேதனையை நினைத்தால்...... ம்......எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது......

தேவர் :—என்ன, தோழரே......!

தொண்டை :—பரங்கிக் காரருடன் சமாதானம் செய்து கொள்ளும்படி அவர்களுக்கு ஒரு தூதுவனை அனுப்புவோமே......

தேவர் :—அப்படியும் அனுப்பிப் பார்த்தேன். முடியாதாம்......? மறுத்துவிட்டார்கள்...... மானத்தோடு மடிந்தால் மடிவோமே

தவிர, நாட்டை அடகு வைக்கும் ஈனத் தொழில் எங்களுக்கு வேண்டாம் என்றார்களாம்......

தெண்டை :—அப்படித்தானே வகை தெரியாமல், வெள்ளையரிடம் தலையைக் கொடுத்து விட்டு, இப்போது, அவர்கள் சொல்கிற படி நாம் தாளம் போட வேண்டியிருக்கிறது.

தேவர் :—சரி...... சரி...... விடுங்கள்! பிறகு, கறுத்தான் கதி நமக்கு வந்துவிடப் போகிறது.

தொண்டை :—இன்றுதானே தீர்ப்பு கூறும் நாள். (சலிப்புடன்) வாருங்கள்...... நாமும் உடன் இருந்து, அந்தக் கொடுமையை நிறைவேற்றி விடுவோம்.

— திரை —

காட்சி 45

திருப்பத்தூர்

விசாரணை மன்றம்.

(கர்னல் அக்நியு, கர்னல் வெல்ஷ், பிளாக்கர்ன் முதலிய வெள்ளையரும்...... தொண்டைமான், படமாத்தூர் தேவர், எட்டய புரத்தான், முகம்மது கலீல் முதலியோரும் அமர்ந்துள்ளனர். விலங் கிடப்பட்ட நிலையில் சின்னமருது, ஊமைத்துரை, கருத்தான், துரைசாமி முதலிய விடுதலை வீரர்கள் ஒரு புறமாக நிற்க வைக்கப்பட்டுள்ளனர். பெரிய மருது சங்கிலியால் பிணைக்கப்பட்டு இழுத்து வரப்படுகிறான்.)

அக்நியு :—மருது பாண்டியரே! இந்த அவை எதற்காகக் கூட்டப் பட்டிருக்கிறது தெரியுமா?

பெ. மருது :—தெரியும்; விருது கட்டி வாழ்ந்த வீர மறவர் சரித் திரத்தைக் குழி தோண்டிப் புதைக்கக் கூட்டப்பட்டிருக்கிறது.

அக்நியு :—வழக்கு மன்றத்தின் நோக்கத்தை அறிந்திருப்பீர், நீர்...

பெ. மருது :—(இழிவுடன்) வகையற்றோரின் திருக்கூட்டத்திற்கு மற்றோர் பெயர் வழக்கு மன்றம் என்றால் முட்டாள்கூட சிரிப்பான்!

அக்நியு :—மூடு வாயை......!

பெ. மருது :—ஏன்? சூதும் வாதும் நிறைந்த உங்கள் வஞ்சக எண்ணத்தை இங்கே அம்பலப் படுத்தி விடுவேன் என்ற அச்சமா......?

அக்நியு :—இல்லை...... சிவகெங்கைச் சீமையின் அரசர் இங்கே சீரழிந்து, சிறப்பிழந்து நிற்கும் அவல நிலையடைந்தும் வெட்கமில்லாமல் வீரகர்சனை புரிகிறாரே என்று மற்றவர்கள் நினைத்துக் கொள்ளக்கூடாதே என்பதற்காக.

பெ. மருது :—ஆஹா......! ஆடு நனைகிறதே என்று அழுததாம் ஓநாய்!

அக்நியு :—பேசத் தெரிந்து கொண்டாய்...... அழகாகப் பேசுவதையே ஆயுதமாகக் கொண்டு எத்தனை நாட்கள் ஏமாற்ற முடியும்......?

பெ. மருது :—உங்களைப் போன்ற எத்தர்கள்தான் ஏமாற்றுவார்கள். அடுக்குத் தொடரில் பேசுவதற்குப் பல தடவை முயன்றும் முடியாமற் போகவே, 'சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்' என்று வீண்பல்லவி பாடுகிறீர்கள், நீங்கள்!

அக்நியு :—ஓ ஹோ......! (கிண்டலாக)......நீங்கள்......?

பெ. மருது :—நினைத்ததை முடித்து நிற்கும் ஆற்றல் படைத்தவர்கள்; நீதி எங்கள் பக்கம் இருக்கிறது......

அக்நியு :—நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்......

பெ. வருது :—மானங் கெட்டவரின் சூழலிலே சிக்கிக் கிடக்கும் நீர் ஒப்புக் கொள்ளாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அக்நியு :—கண்டபடி பேச வேண்டாம்......

பெ. மருது :—கருத் தழிந்து உளற வேண்டாம்......

அக்நியு :—வார்த்தைக்கு வார்த்தை காரசாரமாகப் பேசிவிட்டால், நீ செய்த குற்றம் மறைந்து விடாது......

பெ. மருது :—குற்றத்தைக் கூறாமல், இவ்வளவு நேரம் காலத்தைக் கடத்தியது உன் கோழைத் தனத்தை எடுத்துக் காட்டுகிறது......?

அக்நியு :—நீ புரிந்த அடாத செயலை அடுக்கடுக்காகக் கூற முடியும். ஆனால், அதில் ஒன்றை மட்டும் சொல்கிறேன். நீ சிறுவயல் நகரத்திற்குத் தீ வைத்தாய்......

பெ. மருது :—எங்கள் ஊர், அது. அவசியம் நேரிட்டது...... அழித்தோம் !

அக்நியு :—எங்கள் மதிப்பிற்குரிய நண்பர் புதுக்கோட்டை தொண்டைமான் அரண்மனைக்குச் சென்று பணம்கேட்டு மிரட்டியுள்ளீர்கள், நீயும் உன் தம்பியும் !

பெ. மருது :—இல்லை......! தமிழ்ப் பண்போடு வாழும்படி அந்தப் பகுத்தறிவில்லாதவனுக்கு எச்சரிக்கை செய்தோம் !

அக்நியு :—ஊரார் சொத்துக்களைக் கொள்ளையடித்து, காடுகளில் உள்ள பாளை மரப் பொந்துகளில் பதுக்கி வைத்தீர்கள்......

பெ. மருது :—பச்சோந்திகள் கட்டிவிட்ட பொய்க் கதை......!

அக்நியு :—கம்பெனிக்குக் கப்பம் கட்ட மறுத்தீர்......

பெ. மருது :—உண்மை......

அக்நியு :—காரணம்......

பெ. மருது :—நாங்கள் யாருக்கும் இதுவரை கப்பம் கட்டிப் பழக்கமில்லை......

அக்நியு :—குறைந்த அளவில் கட்டும்படி சலுகைகூட அளித்தோம்......

பெ. மருது :—வயிற்றுப் பிழைப்பிற்காக செழிப்பான நாடு தேடி ஓடிவந்த உங்களிடமா நாங்கள் சலுகை பெறுவது......?

அக்நியு :—நாவை அடக்கிப் பேசு......

பெ. மருது :—முடியாது......! முடியுடை மூவேந்தர்கள் ஆண்ட செந்தமிழ் நாட்டில் பிறந்த நான்...... ஒரு மொழி வைத்து உலகாண்ட செம்மல்கள் பிறந்த பூமியில் வளர்ந்த நான்...... பண்பாடும் பண்பாடோடு அன்பூறும் அருளோடு வாழ்ந்து வந்த நான்...... உன்மத்தம் பிடித்த உன்னோடு ஆயிரம் ஆயிரம் பேர் சேர்ந்து எதிர்த்தாலும் அடங்கி யிருக்க முடியாது !

அக்நியு :—......ம்......ம்......! உன் நிலை மறந்து துள்ளாதே !

பெ. மருது :—துள்ளிப் பாயும் வேலை அடக்கி விட்டோம் என்று இறுமாப்பு கொள்ளாதே !

அக்நியு :—நான் நினைத்தால் உன்னை சுட்டுப் பொசுக்கி விடுவேன்......

பெ. மருது :—கூண்டிலிருக்கும் சிங்கத்திடம் வீரம் பேசும் வீணனே ! என் கட்டுக்களை அவிழ்த்து விட்டுப் பார்......! வாள் கூட வேண்டாம்...... எத்தனை எத்தனையோ வேங்கைகளை வீழ்த்திய என் கரங்களே எனக்குப் போதும்...... ஊர் பேர் தெரியாமல் வந்து இங்கே வீண் ஆரவாரம் செய்யும் உன் நெஞ்சத்தைப் பிளந்துவிடுவேன் ; உன் இரத்தத்தை அள்ளிக் குடித்து என் சுதந்திர தாகத்தைத் தணித்துக் கொள்வேன்...!

அக்நியு :—நிறுத்து, உன் மிரட்டல்களுக்கு இங்கு யாரும் பயப்படமாட்டார்கள். கம்பெனி சட்டப்படி நீ குற்றவாளி...... என்ன சமாதானம் கூறுகிறாய்......?

பெ. மருது :—தமிழ் மண்ணிலே பிறந்த நாங்கள்தான் தமிழகத்தை ஆளும் உரிமையுடையவர்கள். வானூர்ந்த பொதியின் மிசை வளர்கின்ற செந்தமிழும்...... தேனூர்ந்த மது மலர்ச் சோலையில் தெவிட்டாத அதன் மணமும் எங்களுக்கே சொந்தம் ! விண்ணோடும் முகிலோடும் விளையாடும் எங்கள் வீரமும் பண் பாடும் உலகோடு ஒளிவீசும் எங்கள் புகழும் எங்களுக்கே சொந்தம் ! அந்நியர் யாரும் தலையிட நாங்கள் இடந்தர மாட்டோம்......!

அக்நியு :—கட்ட பொம்மன்கூட இப்படித்தான் கர்ச்சித்தான் ; ஆனால், அவனைப் புதைத்த இடத்தில் இப்போது புல்கூட முளைத்துவிட்டது !

பெ. மருது :—புல்லனே ! முளைத்து வந்த அந்தப் புல் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் ஆயிரம் வீரர்கள் கொதித் தெழுந்துள்ளனர், நாட்டில். குறித்துக் கொள், அதை !

அக்நியு :—வீண் கதை வேண்டாம். நீங்கள் செய்த அக்கிரமச் செயல்களுக்கும் ஆணவமான நடத்தைகளுக்கும் உனக்கும் உன் தம்பி சின்ன மருது என்பவனுக்கும் பாஞ்சாலங் குறிச்சி ஊமைத்துரைக்கும் நீதிதேவன்மீது பாரத்தைப் போட்டு மரண தண்டனை விதிக்கிறேன் !

பெ. மருது :—எதிர்பார்த்த தண்டனைதான். சூதுமதியினரின் சொற்களில் சொக்கிப் போனவர்களுக்கு மத்தியில், விசாரணை

என்னும் போர்வையால் நீதியை மறைத்துக் கொண்டு இதை விட வேறென்ன தீர்ப்பை எதிர்பார்க்க முடியும்?

அக்நியு :—உன் கடைசி ஆசை என்ன......?

பெ. மருது :—இமயத்திலே தலைவைத்துக் குமரியிலே கால் நீட்டிப் படுத்திருக்கும் எழில் மிகு தமிழன்னை, இளந் தமிழர்களின் இதயங்களிலே எழுந்து நின்று, பேரரசு நூற்பெரு மக்கள் சூழ்ந்தேத்தப் பாராசு செய்த பழைய நிலைக்கு வர வேண்டும்......! அந்நியன் ஆதிக்கம் அழிந்து தனித் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கும் பொற்காலம் வர வேண்டும்! ஆகாயமளாவிய கம்பத்தில் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும்......! தமிழர் தமிழராய் வாழவேண்டும்......! தமிழகம் தமிழகமாய்த் திகழவேண்டும்......!!

அக்நியு :—இழுத்துப் போங்கள் இவனை, தூக்கு மேடைக்கு!

(வீர அரசன் மருதேந்திரன் இழுத்துச் செல்லப்படுகிறான்.) கர்னல் அக்நியு தீர்ப்பைப் படிக்கிறான்......)

அக்நியு :—சிவகெங்கையை ஆண்டுவந்த பெரிய மருது என்று அழைக்கப்படும் வெள்ளை மருதுவும், அவன் சகோதரன் சின்ன மருதுவும் கம்பெனிக்கு விரோதமாக நடந்து கொண்டதால் அவர்களுக்கும்...கம்பெனி ஆட்சிக்கு எத்தனையோ நன்மைகள் செய்திருந்தும் கடைசி நேரத்தில் கம்பெனியாரின் சந்தேகத்திற்கு இடமாக நடந்து கொண்டதால் கறுத்தானுக்கும் மரண தண்டனை விதிக்கிறேன். பெரிய மருது, சின்ன மருது, கறுத்தான் ஆகிய மூவரும் ஒரே நாளில் திருப்பத்தூரிலேயே தூக்கிலேற்றப்படுவார்கள். சிறையிலிருந்து தப்பிச் சென்று நாட்டில் பலவிதமான குழப்பத்தை உண்டாக்கிய ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சிக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு தூக்கிலேற்ற உத்திரவிடுகிறேன்.

(ஒவ்வொருவரும் விலங்குடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.)

மற்றும், சின்ன மருதுவின் மகன் சிவஞானம், பதினைந்து வயதுள்ள சிறுவன் துரைசாமி உள்பட எழுபத்தைந்து மறவர்களை நாடு கடத்தி தீவாந்திர தண்டனை விதிக்கிறேன்.

(பிடிபட்ட விடுதலை வீரர்கள் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.)

கடைசியாக, எங்களுக்குப் பலவகைகளிலும் ஒத்துழைத்த பெருமைக்குரிய நண்பர்கள் புதுக்கோட்டை தொண்டைமான், எட்டயபுரத்தார் ஆகியவர்களுக்கு மேன்மை தங்கிய கவர்னர்பிரான் சார்பாக நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

(எழுந்து செல்கிறான்; தொண்டைமான் முதலியோர் முகங்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. மன்றம் கலைகிறது.)

— திரை —

காட்சி 46 (அ)

திருப்பத்தூர்

தூக்கு மேடை

(சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பின்னணி இசை கூட்டியும் குறைத்தும் முழக்கியும் உழக்கியும் இசைக்கப்படுகிறது. முதன் முதலில் கறுத்தானை மேடைக்கு இழுத்து வந்து அவனைத் தூக்கில் ஏற்றுகின்றனர். தூக்கில் தொங்கும் அவன் பிணம் 'நிழற் காட்சியில்' காட்டி அகற்றப்படுகிறது. மக்கள் இதயத்தில் திகிலை மூட்டும் பயங்கர அமைதி...... அதனிடையே......

மருதிருவரை அழைத்து வந்து தூக்கு மேடையில் ஏற்றி நிறுத்துகின்றனர். இருவரும், மாக்கிளையிலிருந்து ஊசலாடும் சுருக்குக் கயிற்றைத் தாங்களாகவே தங்கள் கழுத்தில் மாட்டிக் கொள்கின்றனர். பின்னணி இசை படிப்படியாக உயர்ந்து பயங்கர இரைச்சலுடன் நிறுத்தப்படுகிறது.

— திரை —

காட்சி 46 (ஆ)

— *நிழற்காட்சியில்* —

(ஒரே அமைதி......! வீணர்களின் சர்வாதிகார வெறிக்குப் பலியான மருதேந்திரர் இருவரின் வீரத் திருவுருவங்களும் தூக்கில் தொங்கி காற்றில் மெல்ல அசைகின்றன. தீயவர் முதல் தூயவர் ஈருக அத்தனை பேரும் தலை தாழ்த்தி இருபெரும் விடுதலை வீரர்கட்கும் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றனர். விண்ணும் மண்ணும் வெற்றிப் பண் இசைத்த, எம் அருமைத் தலைவர்களே...... வாழ்க...... வாழ்க......' என்ற பின்னணிக் குரல் வானைப் பிளந்து, இளந்தமிழர்களின் இதயங்களில் எதிரொலிக்கிறது.

—(முற்றிற்று)—

Reliable

Please Contact **Prompt service**

For Spectacles and Good Cooling Classes
Reliable and Prompt Service



"CHARLES BROS"

Opticians

31 & 32, FRUIT MARKET, MADRAS-1.

(Prop) **S. RAYPPA REDDY**

Fopmerly of D. JOSEPHS REDDI

N. B.—Special attention given to postal orders
Doctors' Prescriptions executed with accuracy.

Note :—Special Concession allowed to teachers and Students.

PENS:—Sold & Service

உண்மையான காரணம்!

மா. இளஞ்செழியன் எம். ஏ.

"நான் சூரிய குலத் தோன்றல்"

"சந்திர குலம் எங்களுடையது!"

"அக்கினி வம்சத்தவன் நான்! ஆகவே இந்த நாட்டை ஆளும் உரிமை எனக்கும் என் சந்ததியாருக்கும் மட்டுமே உண்டு."

"கைலாய பரம்பரையில் வந்த நான் தான் இந்த நாட்டை ஆளப் பிறந்தவன். மற்றவர்க்கு இந்த உரிமை கிடையாது."

"தேவர்க்கெல்லாம் அரசனை தேவேந்திரனே எங்கள் கொடி வாழ்வின் முதல்வன். ஆகவே அரசுரிமை எங்களுக்கே."

—மன்னாதி மன்னர்கள், பழங் காலத்தில், தமதே இராச்சியம் என்பதை நிலைநாட்ட எழுப்பிய அற்புத வாதங்கள் இவை. தாம் விஷ்ணு அம்சம் என்றும், சிவனார் பரம்பரை என்றும், தேவேந்திரன் கால்வழி என்றும், நான்முக தேவனின் பேரனின் பௌத்திரனே தம் தந்தையாரின் தாயைப் பெற்ற தனயனின் தகப்பனர் என்றும் **தெய்வீக உரிமை** கொண்டாடினர் அந்தக் கால மன்னர்கள். அவர்கள் "எமக்கு வாள் சுழற்றும் வல்லமை உண்டு; வேல் வீசும் வித்தை தெரியும்" என்றுரைத்து ஆட்சிப்பீடம் ஏறியதில்லை; குடிமக்களை ஆளும் முறையும், நாட்டில் வளத்தைப் பெருக்கும் வழியும் பழுதற உணர்ந்த பெற்றியினர் யாம் என்று சொல்லி, செங்கோல் ஓச்சியதில்லை. மாற்றார்தம் அணிவகுப்பைச் சிதைத்து அழிக்கவும், பகைவர் கோட்டத்தில் தோல்விக் குரல் எழுப்பவும், சொந்த நாட்டில் வெற்றிச் சங்கு ஊதவும் வேண்டுமானல் நான் அரசனாக வேண்டும்—பிறர் எவரினும் பார்க்க எனக்கே இத்துறையில் ஆற்றல் மிகவுண்டு என்று தம் வீரப் பிரதாபத்தை எடுத்துக்காட்டி பட்டத் தரசரானது மில்லை. அவர்கள் அரசு கட்டில் ஏறினர் என்றால், அது, அவர்கட்கிருந்த தகுதி, திறமை, அரசாளும் பண்பு இவற்றின் காரணமாக அல்ல; தெய்வீக உரிமையின் காரணமாக! ஆம்! அவர்கள் அப்படித்தான் கூறி வந்தனர்; தாம் அரசாளப் பிறந்தவர்கள்—ஆகவே ஆட்சிப் பீடத்தில் வீற்றிருக்கிறோம் என்றே பேசி வந்தனர். பேசி வந்தது மட்டுமல்ல. அவர்கள் நினைப்பேகூட அது தான். பூர்வஜென்ம புண்ணியம் தம்மை மன்னராக்கிற்று. பூர்வ

ஜென்ம பாபம் வேறு இல்லை உண்ண உணவின்றி ஊசலாடும் ஏழை மக்களாகப் பிறப்பித்திருப் பது போல என்றே அவர்கள் மனமார எண்ணினர். ஆண்ட வன் சித்தம் தம்மை அரசராக் கிற்று என்பதே அவர்களில் பெரும் பாலோருடைய உள்ளத் தில் உறைந்து போயிருந்த கருத்து. உலகில் சிலர் அரசாளப் பிறந்தனர் என்பதும் மற்ற பலர் அரசர்க்கு அடங்கிக் கிடக்கவே பிறப்பிக்கப் பட்டனர் என்பதும் அவர்களுடைய சித்தாந்தம். மக் கள் என்றாலே அடங்கிக் கிடக்க வும், அடிமையாய் இருக்கவும், குற்றேவல் புரியவும், இட்ட பணி செய்யவும், வேண்டும் போது போர் புரியவும், ஏவும் போது உழைத்து உழைத்து உரு மாறவுமே பிறந்த கூட்டம் என் பது அவர்களுடைய அகராதியில் குறிக்கப்பட்டிருந்த பொருள்.

இப்படிப்பட்ட நினைப்பும், நோக்கமும் மன்னர்கள் உள்ளத் தைப் பன்னெடுங் காலமாக ஆண்டு வந்த காரணத்தால்தான், மக்கள் கொதித்தெழுந்து தமக்கு உரிமை வேண்டும் என்று கேட்ட போது, மன்னர்கள் சீறினர். "பரம்பரை அடிமைகளே! உங்க ளுக்கும் உரிமை உணர்வோ?" என்று கேட்டனர்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆமைகளென அடங்கிக் கிடந்த மக்கள் மூன்று நூற்றாண்டு களுக்கு முன்னால், முதன் முறை யாக, பலப்பல நாடுகளிலும், சீறிப் போரிடும் சிங்க ஏறுகளென மன்னர்தம் ஆட்சியை மாய்க்கத் தொடங்கியதும் மன்னர்கள் திகைப்புண்டு போயினர். மக்க ளும் மன்னர்களை எதிர்க்கக்கூடும் என்பதை மன்னர்கள் நினைத்துப் பார்த்ததே கிடையாது—அது வரை. ஆகவேதான் மக்கள் எதிர்ப்பு, அவர்கள் உள்ளத்தில் திகைப்பை மூட்டிற்று.

முன்பு, மன்னர்களின் கொடுமை, எல்லை மீறிச் சென்ற போதெல்லாம் மக்கள் கண்கள் குளமாயின. அதை அந்த மன் னர்கள் கண்டிருக்கிறார்கள். கண்டு, "இது சகஜம்" என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி தம் கோலாகல வாழ்வை வழக்கம் போல் நடத்திக்கொண்டும் இருந் திருக்கிறார்கள். ஆனால் அந்த நீர்த் துளிகளிலே நெருப்பின் அனலும் வீசும்என்பதை மட்டும் அவர்கள் நினைத்துப் பார்த்ததும் இல்லை.

பலவீனன் தேகத்திலும் சில சமயம் சிம்மத்தின் இரத்தம் ஓடும். புழுவும் கொடுமையை எதிர்த்துத் துடிக்கும்—ஓரளவு, ஒவ்வொரு கால், வளைந்த கம்பி யும் நிமிரும்—பிறகு, அதுபோல மன்னர்களாலும், மன்னர்களின் பிரதானியாலும், பிரபுக்களின் கொடுமை நிறைந்த வாழ்க்கை யாலும் தம் வாழ்வு நொறுங்கிச் சிதைந்து போகக் கண்டும் பரம் பரை பரம்பரையாகப் பொறுமை உணர்ச்சியையே அணிகலனாகக் கொண்டிருந்த மக்கள், திடீரென்

ஓர்நாள், கொடுமை தாங்க முடியாத அளவுக்கு வளர்ந்து விட்ட போது, தம்மையும் மீறி, புரட்சிப் புயல் எழுப்பினர். அந்தப் புயல் எத்தனையோ வேந்தர்களின் மணிமகுடங்களை உருட்டித் தள்ளிற்று; எவ்வளவோ சொகுசாக வாழ்ந்திருந்த "ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட வீரதீர கம்பீர" புருஷர்களை யெல்லாம் ஆட்சிப் பீடத்திலிருந்து விரட்டி அடித்தது; எவ்வளவோ காலமாக மக்களைத் தம் இரும்புப் பிடியினுல் கசக்கிப் பிழிந்து வந்த மதோன்மத்தர்களின் மமதையை மட்டந் தட்டிற்று. அந்தப் புயலினால், முடிசார்ந்த மன்னர் பலர் பிடி சாம்பல் ஆனதும், கோல் ஓச்சிய கரங்கள் பல, கட்டை வெட்ட நேர்ந்ததும், ஆணையிட்ட குரல்கள் மக்களின் ஆணை கண்டு அஞ்சி நடுங்கியதும், அஞ்சி நடுங்கி வாழ்ந்தவர்களும் ஆணை பல பிறப்பித்ததும் ஆன நிலைமை உலகில் பல பகுதிகளிலும் ஏற்பட்டது. அந்த நிலை ஏற்படுமென மன்னர்கள் துளியும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அவர்கள் எதிர்பார்க்க வில்லை என்பதற்காக, புரட்சி வராமல் இருந்து விடுமா?

புரட்சி வந்தது. வந்த புரட்சி வெள்ளத்தில் மன்னர் பலர் முடியிழந்து, ஆட்சிப்பிடி இழந்து, வீழ்ந்தொழிந்து போயினர் என்பது மட்டுமல்ல; அவர்கள் தம் உயிர் நாடிபோல் எண்ணிக் காத்து வந்த தெய்வீக உரிமையினும் தத்துவமும் பறி போயிற்று. "ஆண்டவன் கட்டளையாலேயே நாங்கள் மன்னரானோம். நாங்கள் மன்னராக வாழ்வது நாங்களாக அமைத்துக் கொண்ட செயற்கை ஏற்பாடல்ல. நாங்கள் பிறக்கும்போதே மன்னராகத்தான் பிறந்தோம்" என்று அரசர்கள் கூறி வந்தார்களே தெய்வீக உரிமை, அந்த தெய்வீக உரிமையே மக்கள் புரட்சிக்குப் பின் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

முதலாவது சார்லஸ், இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றுண்டில் கோலோச்சிய மன்னன். அவன் இப்படித்தான் தெய்வீக உரிமை கொண்டாடினன். ஆள்வதற்கே நான் பிறந்தேன்—என்பால் ஆட்பட்டிருக்கவே நீர் பிறந்தீர் என்று முரசு கொட்டினன். என்னை எதிர்ப்பவர் யார் உண்டு இம் மாநிலத்தில் என்று இறுமாந்து பேசினன். "சட்டமன்றமா—வேண்டாம். அமைச்சர் குழுவா — தேவையில்லை. பாராளுமன்றத்தைத் தவறாது கூட்டி, அதனிடம் திட்டங்களை நீட்டி, அது தரும் கருத்துரைகளைக் கேட்டு, நான் ஆளவேண்டுமா இந்நாட்டை? நான் ஒப்பேனே இக் கேட்டை" என்று இடியேறென முழங்கினன், எதேச்சாதிகார வாழ்வு நடத்தினன். முடிவு என்னயிற்று தெரியுமோ? அவன் **தலை** பறிபோயிற்று.

மக்கள் மன்றத்தைக் கலந்து பேசாமல், ஊரார் எண்ணத்தை

உணர்ந்து கொள்ளாமல், நாட்டவர் நினைப்பு எத்தன்மைத்து என்பதைஅறியவும் முனையாமல், சார்லஸ், தன் விருப்பம் போல், நாடாளக் கண்ட பாராளுமன்றம் இப்போக்கு ஆகாது என்று தடை விதித்தது. தடையை மன்னன் மீறியபோது மன்னர் ஆட்சி நடைபெற மன்றம் பணம் உதவ மறுத்தது. மன்றத்தவர் செயல் கண்டு மனங்கொதித்த மன்னன் பாராளுமன்றம் இனித் தேவையில்லை என்று அதை மூடி விட்டான். நாட்டில் போர் மூண்டது — மன்னவனுக்கும் மக்களுக்கும் போர் நடந்தது நான்கு ஆண்டுகள். முடிவில் வெற்றி எவர் பக்கம் என்பதைச் சொல்லவா வேண்டும்? சார்லஸ் தோற்ருன். மக்கள் மன்றம் வெற்றி விழா கொண்டாடிற்று.

பாராளுமன்றம், வெற்றி விழாவோடு நிற்கவில்லை. நீதி மன்றம் ஒன்று அமைத்தது சார்லஸ் குற்றவாளியா அல்லவா என்பதைத் தீர்மானிக்க. மன்னன் மக்களைக் காட்டிக் கொடுத்த துரோகி, வஞ்சகன், கொடியவன் என்பது தீர்ப்பு. 1649–ம் ஆண்டு ஜனவரி 30–ம் நாள், சார்லஸ், அவனது சொந்த அரண்மனைக்கு முன்னல், கழுவிலேற்றப்பட்டான்.

சார்லஸ் மட்டுமே அல்ல; மக்கள் உணர்ச்சியை மதிக்க மறுத்த எத்தனையோ மன்னர்கள் கிட்டத்தட்ட இதே காலத்திலும், இதற்குப் பின்னரும், பல நாடுகளில் இதுபோன்ற கோர முடிவினையே எய்தியுள்ளனர்.

பிரஞ்சு நாட்டில் **பதினாரும் லூயி,** தான் செய்த கொடுமைக்கு ஈடாகப் பெற்ற பரிசு, மரணம் அல்ல! தூக்குத் தண்டனை. மன்னனுக்கு மட்டுமா? இல்லை. அவன் மனைவிக்கும் கூட.

அந்த நாட்டில், அரசனும் அரச குடும்பத்தினரும் அவர்களை யொத்த செல்வ நிலையில் இருந்த பிரபுக்களும் பொதுவாக "மேட்டுக் குடியினர்" அனைவருமே, பாட்டாளிகளை, உழவர்களை, தொழிலாளர்களை, ஏழைகளை, திக்கற்றவர்களை செல்வமும், செல்வாக்கும் பெருதவர்களை நடத்திய வகை எவர் உள்ளத்தையும் உருக்கும் தன்மையது.

★

"உயரப்பர்"களை ஏற்றிக் கொண்டு, "கோச்" வேகமாகச் சென்று கொண்டிருக்கும். ஏழைச் சிறுவன் ஒருவன் அதன் சக்கரத்தினடியில் சிக்குண்டு போவான்; பிரபு எட்டிப் பார்ப்பார். கொஞ்சம் 'கருணை' உடையவராக இருந்தால் ஒரு எட்டணு காசுகளை வீசியெறிவார் — வண்டியிலிருந்தபடியே. அது, அந்தச் சிறுவனின் பிரேத அடக்கச் செலவுக்காக! சிறுவன் உடல்மீது சக்கரம் பாய்ந்ததால் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் ஆறெென ஓடிக்கொண்டிருக்கும். பெற்றோர் பிணத்தின் மீது வீழ்ந்து கோவென அழுது கொண்டிருப்பர். அந்தோ

மகனே எமை விட்டுச் சென்ருயோடா என்ற அழுகுரல் கல்நெஞ்சையும் கரைக்குமளவு எழும். சுற்றிலும், அந்தத் தெரு முழுதும் உள்ள பாட்டாளிகள் கூடி நின்று கண்ணீர் உகுத்த வண்ணம் நிற்பர். ஒவ்வொரு முகமும் ஒரு சோக சித்திரமாகவே இருக்கும். சிலர் முகத்தில் மட்டும் கோபத்தின் சாயல் இலேசாகப் படர்ந்திருக்கும். சிலர் கண்களில் மட்டும் அனல் வீசும். சிலர் உதடுகளில் மட்டும் முணு முணுப்பு—இன்னதென்று புரியாத ஏதோ ஒருவகை ஒலிகளின் வெளிப்பாடு காணப்படும். ஆனால் யாவரும் தலை குனிந்த வண்ணம்தான் இருப்பர். "பிரபு" இவற்றையெல்லாம் காண மாட்டார்; "ஏன் நிக்கிறே! கிடக்குது நாய்கள்! வண்டியை ஓட்டு" என்பார் வண்டி ஓட்டுபவனைப் பார்த்து. வண்டி போகும்.

கொஞ்சம் நெஞ்சுத் தைரியம் படைத்தவனுயிருந்தால், மரணத்தைத் தழுவிய மகனின் தகப்பன், போலீசுக்குத் தகவல் தருவான். பிரபு செய்த அக்ரமத்தை எடுத்துக் கூறி, அதற்கு ஏதேனும் பரிகாரம் தேட வேண்டுமென்று "அவர்களின் மேலான கனத்தைப் பிரார்த்தித்துக்" கொண்டிருப்பான். பரிகாரம் கிடைக்கும்—என்ன பரிகாரம் தெரியுமோ—சிறை வாழ்வு. பிரபுக்கல்ல—அவர் ஏன் சிறைக்குப் போகப் போகிருர் — மகனை இழந்து மனுப்போட்ட ஏழைக்கு! அவன் மனுப்போட்டானே அந்தக் குற்றத்திற்காக. ஆமாம்! எவ்வளவு நெஞ்சழுத்தமிருந்தால், அந்தப் பாரி, பிரக்யாதி பெற்ற பிரபுவை எதிர்த்து மனுப் போட்டிருப்பான்! அதற்குத் தண்டனை தரத்தானே வேண்டும்!

★

உழவன் ஒருவன், பண்ணை முதலாளியின் நிலத்தில் ஒரு பகுதியை உழுது பயிரிட்டு வந்தான். தலைமுறை தலைமுறையாக அவன் குடும்பத்திற்கிருந்த பாத்யதை அது. அந்த வழக்கத்திற்கேற்பவே அந்த ஆண்டும் பயிரிட்டான். காலத்தால் விதை தூவி களையெடுத்து, நீர் பாய்ச்சி, எரு விட்டு, பயிர் வளரக் கண்டு, பக்குவம் பல செய்து, உரிய பருவத்தே அறுத்தெடுத்துக் குவித்தான் கோதுமை மணிகளை. பண்ணையார் வீட்டை கோதுமை மூட்டைகள் சென்று சேர்ந்ததும் தனக்குரிய கூலியைக் கேட்கச் சென்றுன் அவரிடம். அவரோ அவனைக் கட்டி வைத்து, பணியாளைக் கொண்டு சவுக்கடி தரச் செய்தார். காரணம், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு தரப்பட்ட கோதுமை குறைவு! அதற்கு உழவனென்ன செய்வான்! பருவ மழை பெய்யாததால் வந்த வினை அது.

★

இயந்திரத் தொழிலாளி வேலை முடிந்து மாலை வீட்டிற்குத் திரும்பினுன். வீட்டில் தன் மகள்—

அழகி—திருமணமாக வேண்டிய வயதுடையவள் காணப்படாமை கண்டு திடுக்கிடுகிறான். பிறகு பக்கத்துத் தெரு சீமான் வீட்டிற்கு அவள் "அழைத்துச்" செல்லப்பட்டாள் என்பதை அறிகிறான். பிராது கொடுக்கிறான் அதிகாரிகட்கு. விளைவு அவனுக்குப் **பாஸ்டிலி** சிறைவாசம்.

★

பிரஞ்சு நாடு, இதுபோன்ற பல வேதனை வரலாறுகளின் நிலைக்களமாய் இருந்தது அந்நாள். மன்னன் லூயி, இவ்வளவு கொடுமைகள் நாட்டில் நடக்கக் கண்டும் ஏன் என்று கேட்டானில்லை. எப்படிக் கேட்பான்? அந்தக் கொடுமை பலவற்றிற்கு ஆரம்ப கர்த்தா அவன் தானே!

மக்கள் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்தனர். இந்தப் பலம் பொருந்திய அதிகார வர்க்கத்தையும் அதன் தலைமைப் பீடமான அரசர் சிங்காதனத்தையும் எதிர்ப்பது என்பது நம்மால் ஆகுமா என்றுதான் வேதாந்தம் பேசிக் கொண்டிருந்தனர் பல காலமாக. இந்த மூட்டைப் பூச்சிகளால் என்ன செய்யமுடியும் என்றே மன்னனும் எண்ணி வந்தான். பாவம், தான் இருப்பது குமுறும் எரிமலையின் உச்சி மீது என்பதை அவன் உணரவில்லை; உணர முடியவில்லை; உணர்த்தவில்லை சூழ்நிலை. ஆனால் குமுறும் எரிமலை வீறி வெடித்தது 1789 ஜூலை 14—ல்! வெடித்த வேகத்தில் அதன்மீது அமர்ந்திருந்த மன்னன் எங்கோ தூக்கி எறியப்பட்டுச் சுக்குநூறாய்ச் சிதைந்தே போயினன். ஆம்! பாட்டாளிகளின் பட்டாளம் அன்று திடீரென குமுறியெழுந்தது. **பாஸ்டிலி** சிறைக் கதவைப் பொடிப் பொடியாக் கிற்று. சிறையிலிருந்த தம் தோழரை யெல்லாம் வெளிக் கொணர்ந்தது. சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் இலட்சிய ஒலிகளை விண்முட்ட எழுப்பிற்று. புரட்சி ஓங்கிற்று. பொல்லாங்கு வீழ்ந்தது. மன்னன் தூக்கிலிடப் பட்டான் அவன் செய்த கொடுமைக்காக.

★

இரஷ்யாவில் கொடுங்கோலன் **ஜார்** மன்னன் சாய்ந்ததும், புரட்சி வீரன் லெனின் "புதியதோர் உலகு செய்வோம்-கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்று புதிய பண் பாடியதும், "இது எனது என்னுமோர் கொடுமை" யில்லாத புதிய சமுதாயம் அங்கு உருவானதும் உலகறிந்த உண்மைகள்.

★

இங்ஙனம் மன்னர் ஆட்சி மடிந்து, மக்கள் ஆட்சி மலர்ந்த நிகழ்ச்சிகள் ஏராளம் உலக வரலாற்றில். எனவேதான், இன்று உலகிலே மன்னர்கள் என்ற பட்டப்பெயரும் அதற்கு அன்டையாளமாக முடியும் தாங்கிக் கொண்டு "உலா" வருபவர்கள்

பெயரளவுக்கு மட்டும் மன்னராக இருக்கவும், நாடாளும் உரிமைகளை மக்கள் தலைவர்களிடம் தரவும் ஒப்புகின்றனர். செங்கோல் அவர்களிடம்தான். ஆனால் ஆட்சிப் பொறியின் அச்சாணியைத் திருப்பும் சாவி மக்களிடம். மக்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் போற்றுதலுக்கும் உரிய தலைவர்களிடம் — அத்தகையவர்களை உள்ளடக்கிய சட்ட சபைகளிடம்! இந்த நிலை இன்று ஏற்படுகிறது என்றால், இதற்குக் காரணம், மன்னர்களின் தாராள மனப்போக்கே அல்ல: குடிமக்கள் தம்மைத் தாமே ஆளவேண்டும்—அதுவே ஜனநாயகம் என்பதை அரசர்கள் அறிந்து விட்டனர் என்பதும் அல்ல; முதலாம் சார்லஸ்களை, பதினாறும் லூயிகளை, ரஷ்ய நாட்டு ஜார்களை வரலாற்றுச் சுவடி சுட்டிச் சுட்டிக் காட்டுகிறதே, அதுதான் உண்மையான காரணம்!! அது ஒன்றுதான் உண்மையான காரணம்.

— "போர்வாள்"

(47-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்வவேர்: இதற்கு மூலை சம்பந்தப்பட்ட சகல ரோகங்களையும், குன்ம சம்மந்தமான ரோகங்களையும் நீக்கும் வல்லமையுடையது. சித்த வைத்தியத்தில் செய்யப்படும் மகாவில்வாதி லேகியம், வில்வாதி லேகியம் இவைகளுக்கு வில்வவேரும் பழமும் முதன்மையான சரக்காகும்.

மேலும், கருவுற்றிருக்கும் பெண்களில் சிலருக்கு நான்கு அல்லது ஐந்து மாதங்கள் முடியும்வரை மசக்கை ஏற்பட்டு அதனால் மயக்கம், வாய் நீரூறல், வெள்ளோக்காளம், ஆகாரம் செல்லாமை, ஓயாத வாந்தி இவைகள் ஏற்பட்டு கர்ப்பிணி மிக்க பல வீனப்பட்டு விடுவதுண்டு. இந் நிலையில்—எந்த மருந்தைக் கொடுத்தாலும் தக்க பலனை அளிப்பதில்லை. இச்சந்தர்ப்பத்தில், மேல்பட்டை நீக்கித் தட்டச் சிதைத்த வில்வ வேர் மூன்று தோலா, நற்சீரகம் $1\frac{1}{2}$ தோலா, திராட்சைப் பழம் $1\frac{1}{2}$ தோலா, விலாமிச்ச வேர் 1 தோலா, ஏலரிசி 1 தோலா இவைகளை ஒன்றிரண்டாகத் தட்டி, மண் பாண்டத்திலிட்டு அரைப்படி தண்ணீர் விட்டு அரைக்கால்படியாகச் சுண்டக்காய்ச்சி, காலை—மாலை இரண்டு அவுன்ஸ் வீதம் கொடுத்து வந்தால் ஒரு வாரத்திற்குள் மேற்கண்ட குற்றங்கள் நீங்குவதுடன், கருவிலிருக்கும் சேயும் நன்கு வளர்ந்து வரும்.

— தமிழ் நாடு

முறிந்த பாசம்

[ரங்கமணி]

தபால்காரன் கொடுத்துவிட்டுச் சென்ற கவரை ஆவலும் அவசரமும் போட்டியிடப் பிரித்துப் பார்த்தாள் மீனாட்சி. அவளது அருமை மகள் வாஸந்தியிடமிருந்துதான் வந்திருந்தது. கடிதத்தில் கண்ட வாக்கியம் ஒவ்வொன்றும் அவள் உள்ளத்தில் பதிந்து சிந்தனையும் வேதனையும் உண்டாக்கிக் கொண்டிருந்தன.

மயிலாப்பூர்,
27–10–54.

பிரியமுள்ள அம்மாவுக்கு,

வாஸந்தி நமஸ்காரம். நேற்றையதினம் இங்கு மாதவன் வந்திருந்தான். இதற்குமேல் எழுதுவதற்கு என்ன இருக்கிறது? இரண்டு நாட்கள் இங்கு இருந்துவிட்டு திரும்பிச் செல்லும் வரையில் நான் முன் எச்சரிக்கையாக இருந்தும் போகும்பொழுது வழக்கம்போல் தனது திருவிளையாடலைக் காண்பித்துவிட்டு சென்றுவிட்டான். மாப்பிள்ளையின் தங்கச் செயின் போட்ட கைக் கடியாரத்தைக் காணவில்லை. 'அவர்' முகத்தில் விழிப்பதற்குக் கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது. அழையாத வீட்டிற்கு நுழையாத விருந்தாளியாக வந்து புக்ககத்தில் எனக்கு நல்ல 'மதிப்பைத்' தேடித் தந்துவிட்டான்.

இதற்குமேல் மீனாட்சியால் கடிதத்தைப் படிக்க முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்ட அவளது முகத்தில் வியர்வை பூத்து மினுமினுத்ததோடு கண்களிலிருந்து கிளம்பிய கண்ணீர் முத்துக்கள் அவளது கன்னங்களில் ஒன்றன் பின் ஒன்றாக நகர்ந்து கையில் பிடித்திருந்த காகிதத்தில் விழுந்து எழுத்துக்களை நனைத்தன. அவள் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த உணர்ச்சிகள் யாவும் வெடித்துப் பழைய நினைவுகளாக மாறி அவள் நெஞ்சை அரித்தன.

மாதவன்—மீனாட்சியின் ஒரே தம்பி. சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து தன் ஒரே சகோதரியின் நிழலில் வளர்ந்தவன். மாதவனுக்கு தகப்பனார் வைத்துவிட்டுப்போன ஆஸ்தி சிறிது இருந்தாலும் மாதவனை சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தாள்.

வாஸந்தி—மீனாட்சியின் ஒரே அருமை மகள். மாதவன் மீனாட்சியிடத்தில் வந்த சில வருஷங்களுக்குப்பின்தான் வாஸந்தி பிறந்தாள். மாதவனையும், வாஸந்தியையும் தன் இரு கண்களாகவே பாவித்து வளர்த்து வந்தாள் மீனாட்சி.

மீனுட்சியின் கணவர் கிருஷ்ண மூர்த்தி சென்னையில் ஒரு பிரபல கம்பெனியில் நல்ல வேலையில் இருந்ததால் அந்தக் குடும்பத்திற்குப் பணத்தட்டு ஏற்படாமல் நன்றாகவே இருந்து வந்தது.

மீனுட்சி தன் தம்பியை நன்றாகப் படிக்க வைத்து, வேலையில் அமர்த்தி, தனது குலக்கொடி வாஸந்தியை அவனுக்குக் கொடுத்து தனது குடும்பத்திலேயே வைத்துக் கொண்டு என்றும் இன்பத் தென்றலிலே தங்கள் குடும்பப் படகு செல்லும் என்று ஆசைக் கனவு பல கண்டு கொண்டிருந்தாள்.

மாதவன் மீனுட்சி வகுத்த நேர் பாதையிலே செல்லவில்லை. அவனது வாழ்க்கைச் சகடம் தவருன பாதையில் சென்றுகொண்டிருந்தது. மீனுட்சி ஆசைக் கனவு மூலம் கட்டிய மனக்கோட்டையைத் தனது துர்நடத்தை என்ற ஆயுதத்தைப் பிரயோகித்துத் தவிடு பொடியாக்கினுன்.

மாதவனுக்குப் படிப்பில் நாட்டம் செல்லவில்லை. மற்ற விஷயங்களைச் சுலபமாகக் கற்றுவிட்டான். முதலில் வீட்டிலிருந்த சில்லரைக் காசுகள் சுலபமாக மறையத் தொடங்கின. பின்பு நோட்டுகள் ரூபத்தில் செல்லத் தொடங்கின. மீனுட்சி முதலில் அலட்சியமாக இருந்தாலும் இப்பொழுது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்தாள். தம்பியின் போக்கு அவளைத் திடுக்கிட வைத்தது. தன் கணவருக்கும் மகளுக்கும் தெரியாமல் மாதவனைக் கூப்பிட்டு அவன் செய்யும் செயலைக் கண்டித்ததோடு அவனெதிரில் தன் கண்களையும் கசக்கினுள். இருந்தும் இந்த வயதில் சாதாரணமாக எல்லா வீட்டுப் பிள்ளைகளும் செய்கின்ற வேலையைத்தான் இவனும் செய்கிறுன் என்று மனத்தைச் சிறிது சமாதானப்படுத்திக் கொண்டாள். அமைதியாகச் சென்று கொண்டிருந்த அவளது வாழ்க்கை இப்பொழுது சிறிது ஆட்டம் கொடுக்கத் தொடங்கியது.

மீனுட்சியின் கண்டிப்பினுல் தனது செயலைச் சிறிதும் நிறுத்தவில்லை. அதைத் தொடர்ந்தே செய்து வந்தான். ஆனுல் அவன் திருட்டுத் தொழிலில் சிறிது மாற்றம் ஏற்பட்டிருந்தது. பணத்திற்குப் பதிலாக வீட்டிலிருந்த வெள்ளிப் பாத்திரங்களும், வாஸந்தியின் ஒரு சில நகைகளும் மாதவனுல் மார்வாடிக் கடையில் தஞ்சம் புகுந்தன. பணத்தட்டு ஏற்படும் பொழுது வீட்டிற்கு வருவது, இரண்டு நாட்கள் நல்ல பிள்ளையைப்போல் நடந்து கொள்வது, வகையான பொருளை எடுத்துக்கொண்டு கம்பி நீட்டுவது என்ற நிலைக்கு மாதவன் மனம் மாறி இருந்தது.

மீனுட்சி உடல் குன்றிப் போனுள். அவள் உள்ளம் எரிமலைபோல் குமுறிக்கொண்டிருந்தது. பாசம், நேசம், பிணைப்பு, பிரீதி இத்தனையும் கொட்டி வளர்த்த தன் தம்பி இந்த மோச

மான நிலைக்கு வருவான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சிறு வயதிலிருந்தே அதிக அன்பு செலுத்தி அவன் கேட்டபொழுதெல்லாம் காசைக் கண்டபடி கொடுத்து செலவழிக்க விட்டதனால்தான் இந்த நிலைக்கு அவன் வர நேரிட்டது என்று எண்ணித் தன் மனதிற்குள்ளேயே புழுங்கினாள். மாதவனின் வாழ்வு வசந்தகால வைகறையாக அமையும் என்று எதிர்பார்த்தது இனி நடக்காது என்று அவளுக்குத் திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. படித்து, பட்டம் பெற்று ஊர் மக்கள் முன் உயர்ந்த மனிதனைக் காட்சி அளிப்பான் என்று ஏங்கினாள். ஆனால் மாதவன் பத்தாவது வகுப்புக் கூட தேறாமல் களவு தொழிலைக் கற்றுக்கொண்டான். திருடன் என்ற பட்டத்தைத் தன் குடும்பத்தில் பெற்றுக் கொண்டான்.

மீனாட்சியின் கணவர் கிருஷ்ணமூர்த்திக்கு மாதவனின் நடத்தை பூராவும் மீனாட்சி சொல்லாமலே நன்கு தெரியும். இருந்தும் மீனாட்சியின் மூலமாக அறிந்துகொள்ள அவர் விரும்பவில்லை. அதன் மூலம் அவள் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த மனப் புயலைக் கிளப்ப அவர் பிரியப்படவில்லை. ஆனால் அவர் மற்றொரு முடிவுக்கு வந்துவிட்டார். மீனாட்சியைக் கலந்து வாஸந்திக்கு நல்ல இடத்தில் ஒரு வரனை நிச்சயித்து திருமணத்தை முடித்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார்.

மீனாட்சியின் உள்ளம் முதலில் ஏமாற்றத்தால் எதிரொலித்தாலும் தனது கணவரின் முடிவு சரி என்றே அவள் கருதினாள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கிவிட்டாள். ஆனாலும் அவள் இதயத்தில் வருடக் கணக்கிலே ஊறிப் போயிருந்த சகோதர பாசம் அடிக்கடி தலை தூக்கி அவளை வாடச் செய்தது.

வாஸந்தியின் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. அவளது காதத்தைப் பிடித்த கணவன் சென்னையில் நல்ல சர்க்கார் வேலையில் இருந்தான். உற்றார் நண்பர் எல்லோரும் வந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். ஏன்! அதே சமயத்தில் வந்திருந்தவர்களில் ஒரு சிலர் மீனாட்சியிடம் வந்து மாதவனைப்பற்றிப் புகார் செய்தபொழுது அவளது இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

'கடந்த மாதத்தில் எங்கள் வீட்டிற்கு மாதவன் வந்திருந்தான். நான்கு நாட்கள் தங்கிவிட்டு ஐந்தாம் நாள் காலை எங்கள் வீட்டுக்காரர் ஜேபியிலிருந்த இருபது ரூபாயை எடுத்துச் சென்றுவிட்டான். நேரில் வரும் பொழுது உன்னிடம் சொல்லலாம் என்றிருந்தேன். இதற்குள் இப்படிக் கெட்டு சீர்குலைந்து விடுவான் என்று நான் நினைக்க

வில்லை. இவை மீனாட்சியின் சித்திப் பெண் சொன்னவை.'

இந்த மாதிரி வார்த்தைகளைக் கேட்டதும் மீனாட்சி துடி துடித்து விட்டாள். நம் வீட்டோடு வந்த திருட்டு இப்படி வெளியிலும் பரவி விட்டதே! சுவாமி! ஈஸ்வரா! மாதவனுக்கு நல்ல புத்தியைத் தரக் கூடாதா என்று இறைவனை வேண்டினாள்.

வாஸந்தியின் திருமணம் முடிந்து இரண்டு தினங்கள் கழித்து வற்றிய உடலுடனும் ஒட்டிய கண்களுடனும் மாதவன் வந்தான். சமையலறையில் வேலையில் ஈடுபட்டிருந்த மீனாட்சி 'அக்கா' என்ற குரல் கேட்டு வெளியே வந்தாள். மாதவனின் உருவத்தைக் கண்டதும் அவளுக்கு உணர்ச்சி நெஞ்சை அடைத்தது. உள்ளக் கேணியிலிருந்து சுரந்த அன்பு நீர் வார்த்தைகளாக வெளிவந்தது. இத்தனை நாட்களாக அவன்மேல் இருந்த கோபம் எல்லாம் அவனைக் கண்டதும் ஆதவனின் ஒளி பட்ட பனிபோல் மறைந்தது.

'வாடா கண்ணு! அப்புறம் நீ பேசலாம். முதலில் சட்டையைக் கழற்றிவிட்டுச் சாப்பிடு' மீனாட்சியின் உள்ளத்தில் பின்னிக்கிடந்த சகோதர பாசம் வார்த்தைகளாக வெளிவந்தன.

கிருஷ்ணமூர்த்தி காரியாலயத்திற்குச் சென்றிருந்தார். வாஸந்தி அடுத்த வீட்டு சிநேகிதியுடன் ஒரு புதிய படக்காட்சிக்குச் சென்றிருந்தாள்.

மாதவன் சாப்பிட்டு எழுந்தான். பல நாட்களாகப் பட்டினி என்று அவன் சாப்பிட்டதிலிருந்து மீனாட்சிக்குத் தெரியவந்தது.

மாதவனை அழைத்து ஹாலில் சென்று சிறிது நேரம் படுத்து உறங்கச் சொன்னாள். மாதவனிடத்தில் எதைப்பற்றியும் பேச அவள் விரும்பவில்லை. மேலும் வீட்டு வேலை அதிகமாக இருந்தது.

இரண்டு மணிக்கு காபியை எடுத்துக்கொண்டு வந்து பார்த்த மீனாட்சி திடுக்கிட்டாள். படுக்கை காலியாக இருந்தது. ஆவலும் அவசரமும் ஒன்றையொன்று முந்த உள்ளே போடப்பட்டிருந்த பீரோவைப் பார்த்தாள். அவள் நினைத்தது சரியாக இருந்தது. பீரோவின் கதவின் தாழ்ப்பாள் நீக்கப்பட்டு உள்ளே இருந்த பணம் பறிபோயிருந்தது.

உள்ளமும் உடலும் வேதனைப்பட மீனாட்சி தலைமேல் கை வைத்துக்கொண்டு பீரோவின் அருகிலேயே உட்கார்ந்து விட்டாள். கண்ணீரைப் பெருக்கிக் கதற வேண்டுமென்று அவள் நினைத்தாள். ஆனால் கண்ணீர் வரவில்லை. இரும்புபோலிருந்த அவளது உள்ளம், தான் செய்த முட்டாள்தனத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்தது.

'என்ன! மீனாட்சி! தம்பியின் நினைவு வந்துவிட்டதா?' கணவரின் குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

வேதனையும் விம்மலும் நிறைந்த உள்ளத்தோடு நடந்த விஷயத்தை ஒவ்வொன்றாக எடுத்துச் சொன்னாள் மீனாட்சி.

'மீனாட்சி! வாஸந்தியை அவள் கணவன் வீட்டிற்குக் கொண்டு விடுவதற்கு வேண்டிய செலவுகளுக்காக என் நண்பரிடமிருந்து நேற்றுதான் அந்த இருநூறு ரூபாயைக் கடன் வாங்கி வைத்தேன். இதற்குள் அந்தப் பணத்தை அந்தத் திருட்டுப் பையனிடம் சிக்கவைத்து விட்டாயே! பட்ட துன்பமெல்லாம் போதாதா! ஏன் அந்த தடிக் கழுதையை இந்த வீட்டிற்குள் சேர்க்கிறாய்? உன் அன்பை எல்லாம் அவனிடத்தில் செலுத்தி என் பணத்தையெல்லாம் கோட்டை விடுகிறாயே! மாதவன் செய்யும் அக்கிரமங்களை எல்லாம் உன் இதயமாகிய இரும்பு பேழையில் பூட்டி வைக்க நினைக்காதே. இன்றிலிருந்து அவன் தொடர்பை அறுத்துக் கொள்!' கிருஷ்ணமூர்த்தியின் உள்ளத்தில் இவ்வளவு நாட்களாகக் குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்து வார்த்தைகள் கடுகுபொறிவதுபோல் வெளி வந்தன.

தன் கணவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் மீனாட்சியின் இதயத்தின் அடித்தளத்தையே தொட்டன.

'இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள்'. மீனாட்சியின் வாயிலிருந்து பயமும் நயமும் கலந்த வார்த்தைகள் வெளிவந்தன. ஆனால் அதே சமயத்தில் அவள் மனதில் ஒரு புதுவித வைராக்கியம் ஏற்பட்டுவிட்டது.

நாட்கள் நகர்ந்து சென்றன. கிருஷ்ணமூர்த்தி வாஸந்தியை அவள் கணவரிடம் கொண்டு விடச் சென்றிருந்தார். மீனாட்சி மட்டும் தனித்து வீட்டிலிருந்தாள்.

அன்று மாலை கோயிலுக்குச் சென்று திரும்பி வந்துகொண்டிருந்த மீனாட்சியை சந்து முனையில் 'அக்கா' என்ற குரல் கேட்டு திரும்பினாள். மாதவன் மீனாட்சியின் இரண்டு அடி பின்னால் வந்து கொண்டிருந்தான். மீனாட்சி ஒன்றும் பேசவில்லை. தன் வீடு வந்ததும் மாதவனைச் சைகை காட்டி உள்ளே அழைத்தாள். அவன் உள்ளே வந்ததும் தெருக் கதவைத் தாளிட்டாள். அவனை அழைத்துக் கொண்டு ஹாலில் மாட்டியிருந்த அவர்களது பெற்றோர் படத்திற்கு முன்பாக வந்து அவனை நிற்கவைத்தாள்.

'மாதவா! இன்றுதான் நான் உன்னைக் கடைசியாக எச்சரிக்கிறேன். இதுதான் எனது கடைசி கோரிக்கையும் கூட.'

'என்ன அக்கா! நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!' மாதவனின் குரலில் பதற்றம் இருந்தது.

'மாதவா! இவ்வளவு நாட்கள் நீ செய்த செயல்களைச் சிறிது எண்ணிப் பார். உனக்காக நான்

பட்ட துன்பங்கள் எவ்வளவு என்பதை உன் மனதைத் தொட்டுக் கேட்டுக்கொள். உன்னுடைய தவறுதல்களைக் கவனியாது, உன்னை ஆசையோடு வரவேற்று, ஆகாரம் கொடுத்து, அன்பு வார்த்தைகள் சொன்ன எனக்கு நீ செய்த கைம்மாறு என்ன? வாஸந்தியைக் கொண்டு விடுவதற்காக வைத்த ரூபாயையும் எடுத்துச் சென்றுவிட்டாயே! இது நீயா யமா!' மீனாட்சியினது இதயவெள்ளம் உணர்ச்சி மடைகளை உடைத்துக் கொண்டு வார்த்தைகளாக வெளி வந்தன.

'அக்கா! என்னை மன்னித்து விடு. இனி என்னைப் புது மனிதனைக் காண்பாய்' ;மாதவனின் வார்த்தைகளில் உறுதியும் நயமும் கலந்திருந்தன.

'உன்னை ஈன்ற பெற்றோர் இறந்து விட்டாலும் அவர்களது உருவப் படம் இதோ இருக்கிறது. இதன் முன்பாக என்னிடம் 'நான் இனிதிருட மாட்டேன். உழைத்து மனிதனாக உன் முன் சீக்கிரத்தில் காட்சி அளிப்பேன்' என்று என்னிடம் ஆணையிடு. அப்பொழுதுதான் என் உள்ளம் சாந்தி அடையும்'. மீனாட்சி உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டினாள்.

மகுடி நாதத்திற்குக் கட்டுப் பட்ட பாம்பைப்போல் மாதவன் அடிபணிந்தான்.

'அக்கா.' வார்த்தைகளை முடிக்க வில்லை.

'இந்தா இருநூறு ரூபாய்' இதை வைத்துக்கொண்டு உன் வாழ்க்கைப் பாதையைச் சீர் செய்துகொள். உன் தாயாரின் பணம்தான் இது'. மாட்டியிருந்த படத்திற்குப் பின்னால் போட்டிருந்த துணி முடிச்சை மாதவன் கைகளில் திணித்தாள் மீனாட்சி.

'சீக்கிரம் போய்விடு. அவர் வரும் நேரமாகிட்டது' மீனாட்சி மெதுவாகச் சொன்னாள்.

தயங்கித் தயங்கி அவன் செல்வதையே கடைசி வரையிலும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மீனாட்சி.

மீண்டும் நினைவு உலகத்திற்கு வந்தாள் மீனாட்சி. வாஸந்தி ஆரம்பத்தில் எழுதிய கடிதத்தின் தொடர்ச்சியை மீண்டும் படித்தாள்.

'மாதவன் எடுத்துச் சென்ற தங்க செயின் போட்ட கைக் கடிகாரத்திற்குப் பதிலாக நீ அப்பாவிடம் சொல்லி வேறொன்று வாங்கிக் கொடுத்தால் என் மனமும் அவர் உள்ளமும் சாந்தி அடையும்.'

இப்படிக்கு,
உன் பிரியமுள்ள
வாஸந்தி.

கடிதத்தைப் படித்து முடித்த மீனாட்சிக்கு இதயமே வெடித்து விடும் போலிருந்தது. கடந்த மாதத்தில் இங்கு வந்திருந்த பொழுது உள்ளம் நோக உப

தேசம்செய்து, சத்தியமும் வைத்துவிட்டு கடைசியில் வாஸந்தியின் வீட்டில் போய் தன் கைவரிசையைக் காண்பித்து விட்டானே என்று நினைக்கும் பொழுது அவளுக்கு மாதவனிடத்தில் ஒரு தனிப்பட்ட வெறுப்பு ஏற்பட்டது. உள்ளத்தின் ஒரு பாகத்தில் சிறிது இருந்த அன்பு நீரும் மறைந்து போயிற்று.

வாசலில் மிதியடிகளின் சப்தம் கேட்கவே நிமிர்ந்து நோக்கினாள் மீனாட்சி. சீவி வாரி விடப்பட்ட கிராப்பும், தும்பைப்பூ போன்ற சட்டையும், அதற்கேற்ற வேஷ்டியும் அணிந்து கொண்டு எதிரே நின்ற மாதவனைக் கண்டதும் ஸ்தம்பித்து விட்டாள்.

'அக்கா! என்னை ஆசீர்வாதம் செய். உன் கிருபையால்.' வார்த்தைகளை முடிக்கவில்லை மாதவன்.

'யார் நீ! முதலில் இந்த வீட்டை விட்டு வெளியே செல்' மீனாட்சியின் வாயினின்று வார்த்தைகள் வெளி வந்தன.

'என்ன அக்கா! விளையாடுகிறாய்' சிரித்துக்கொண்டே கேட்டான் மாதவன்.

'விளையாட்டா! இதுகூட சபதம் வைத்துவிட்டு பிறகு சொந்தக்காரரின் வீட்டிலேயே அதுவும், உன் சகோதரியின் மகளின் வீட்டிலேயே திருடுவது போலல்ல. ஏன் வீண் பேச்சு, நீ சீக்கிரம் வந்த வழியைப் பார்த்துச் செல்'.

'என்ன அக்கா இது! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே' மாதவனின் குரலில் ஒரு நடுக்கம் இருந்தது.

'அக்கா என்று கூப்பிடுவதற்கு உனக்கு என்ன அருகதை இருக்கிறது? இனி நீ எனக்கு தம்பியுமில்லை. நான் உனக்கு சகோதரியுமல்ல. நம்மிடையே இருந்த உறவும் அன்பும் ஒழிந்து ஒரு மாதமாகிறது. இனி மானங்கெட்டவனிடத்தில் பேசிக்கொண்டிருப்பதற்கு நான் தயாராயில்லை." மீனாட்சி வார்த்தைகளை அனுவசியமாக உதிர்த்தாள். அடுத்த நிமிடம் அவன் பதிலுக்குக் காத்திராமல் தன் உள்ளக் குமுறலைக் கதவின்மேல் காண்பித்துத் தாளிட்டுக்கொண்டு உள்ளே சென்று விட்டான்.

ஒரு வாரம் கழிந்திருக்கும். தபால்காரன் கொடுத்த இரண்டு கடிதங்களை உடைத்துப் பார்த்தாள் மீனாட்சி. ஒன்று வாஸந்தி எழுதியிருந்தாள்

பிரியமுள்ள அம்மாவுக்கு,

வாஸந்தி எழுதியது. காணாமற் போன தங்கச் செயின் போட்டைக்கடிகாரம் கிடைத்துவிட்டது. மேஜையின்மேல் கழற்றி வைத்திருந்தபொழுது அது தவறி கீழே வைத்திருந்த அழுக்குக் கூடையில் விழுந்திருந்தது. வீணாக மாதவன் மேல் பழி சுமத்தியதற்கு வருந்துகிறேன். மாதவன் வேலூரில் ஏதோ ஒரு கம்பெனியில் வேலை

யில் அமர்ந்திருக்கிறேனும். மாப்பிள்ளை கடந்தவாரம் வேலூர் போயிருந்தபொழுது தெரிய வந்தது. தவறி உன் மனதையும் புண்படுத்திவிட்டதற்காக என் மனம் மிக வருந்துகிறது.

இப்படிக்கு,
பிரியமுள்ள,
வாஸந்தி.

துக்கம் தொண்டையை அடைக்க அடுத்த கடிதத்தைப் பிரித்தாள் மீனாட்சி.

வேலூர்
9-11-54

என் அன்புத் தெய்வத்திற்கு,

மாதவன் நமஸ்காரம். உலகத்தில் தவறு செய்பவர்கள் என்றுமே இருந்த மாட்டார்கள் என்ற எண்ணத்தில் மண்ணைப் போட, உன்னிடத்தில் ஆணை வைத்து வேலூர் சென்று, நீ கொடுத்த இருநூறு ரூபாயை ஒருகம்பெனியில் டிபாஸிட்டாகக் கட்டி, என் சுய முயற்சியில் வேலைக்கு அமர்ந்தேன். முதல் மாத சம்பளம் கிடைத்தவுடன், என் இதயக் கோயிலில் வீற்றிருக்கும் என் சகோதரியான உன்னிடத்தில் ஆசி பெற ஓடோடி வந்தேன். ஆனால் பெரிதும் ஏமாற்றம் அடைந்தேன். இங்கு இனி நல்ல மனிதனை வாழ முடியாது என்று நான் கண்டுகொண்டேன். என் நண்பனுக்குத் தெரிந்த ஒருவர் மலேயா செல்கிறார். அவருடன் போகத் தீர்மானித்து விட்டேன். இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்பொழுது நான் கப்பலில் பாதி தூரம் சென்றிருப்பேன். இந்தப் பாவி உனக்கு இதுவரையிலும் இழைத்த கொடுமைகளை எல்லாம் மன்னித்துவிடு. இந்த ஏழை கோரும் கடைசி ஆசை இது.

இப்படிக்கு
உனக்குத் துன்பத்தைக் கொடுத்த
மாதவன்.

—சுதேசமித்திரன்

கொய்த மலர்கள்

தூங்கியவன் விழித்தது போல் இன்று தமிழரிடை ஓர் எழுச்சி உண்டாகியிருக்கிறது. இந்த மறுமலர்ச்சியைப் பல் வேறு துறைகளில் காண்கிறோம். தமிழ் மொழியில் துவங்கி தமிழ்நாடு என்ற எண்ணம் வரை இந்த மறுமலர்ச்சி இருக்கிறது.

உணவும் உடையும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தானம் நமது வீடுகளில் முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும்.

வில்வமும் அதன் பயனும்

(வைத்திய பாஸ்கர ஜி. கந்தசாமி ராஜு)

தமிழில்—வில்வம், தெலுங்கில்—பில்வமு, வடமொழியிற்—பில்வம் இந்தியில்—வேல், லத்தீனில்—Aegle Marmelos, ஆங்கிலத்தில் — Bael tree என்று சொல்வதுண்டு.

இந்த வில்வ மரம் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் எல்லா இடங்களிலும் உண்டாகிறது. நமது தமிழ் நாட்டில் சிவன் கோவில் நந்தவனங்களில் விசேடமாகக் காணப்படுவதுடன், மற்ற இடங்களிலும் சுலபமாகக் கிடைக்கும். வில்வத்தின் இலைகள் சிவாலயங்களில் விசேடமாக மதிக்கப்படும் மூலிகை. இதை மக்கள் உண்டு எந்நோயுமின்றி சுகமாகவும் பரிசுத்தமாகவும் வாழவேண்டுமென்றே சிவபெருமான் சந்நிதானத்தில் மக்களுக்கு வழங்கப்பெறுவதாக நாம் கருதுகிறோம்.

வில்வ மரத்தின் சமூலம், துளிர், இலை, பூ-பிஞ்சு, பழம், பிசின், வேர் யாவும் மக்களுக்குப் பெரிதும் பயன்படும். சக்தி கொண்ட மூலிகை இனங்களில் ஒன்றாகும் என்பது எமது அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

வில்வத்தின் இலைக்குச் சகல மேகரோகமும் போவதுடன், குழந்தைகளுக்கு ஏற்படும் பதினெட்டுவித கண் ரோகங்களும், செங்கிரந்தி, கருங்கிரந்தி, கிராணி மாந்தம், மாலைக்கண் (அந்திக் குருடு) கண்ரோகங்கள், காய்ச்சல், வயிற்றோட்டம், வாய் நாக்கு இவைகள் வெந்து வெளிறி இருத்தல், எலும்புருக்கி, அஸ்திச்சூடு இவைகளை நீக்கிக் குழந்தைகளை அழகு மேனியாக்குவதில் நிகரற்ற மூலிகையாகும். இந்த இலையின் சத்து சேர்க்கப்பட்ட சித்த மருந்துகள் தேர்ந்த சித்த வைத்தியர்களிடம் எப்போதும் கிடைக்கும்.

வில்வத்தின் பூவும்—பிஞ்சும் குன்மரோகத்தையும், பழம் கண்ணிருளையும் போக்கும். பிசின் முற்றிலும் கெட்டுப்போன சுக்கிலத்தைக் கெட்டிப் படுத்தி அபிவிருத்தி செய்து மனிதனை வல்லமையுடைய மன்மதனைச் செய்யும். வில்வத்தின் வேர் ஒன்பது வகை மூலரோகங்களையும், குன்மரோகங்களையும் இவைகளின் சம்பந்தப்பட்ட கூட்டு வியாதிகள் துணை வியாதிகள் முதலியவைகளையும் போக்கிவிடும்.

தஞ்சையை ஆண்ட சாபோசி என்ற மராட்டிய மன்னரால் அவரது சொந்த முயற்சியால் சேகரித்துத் தொகுத்து தஞ்சை சரஸ்வதி மஹாலில் வைக்கப்பட்டிருக்கும் வைத்தியச் சுவடிகளில் வில்வத்தைப் பற்றிய அரிய முறைகள் அநேகம் பொதிந்து கிடக்கின்றன.

வில்வத்தின் தளிரை நான்கு முதல் ஐந்து வரை தினமும் காலை மாலை தின்று வந்தால் அதிகச் சூடு, நாவறட்சி, கண் கை, கால் எரிச்சல், மலச்சிக்கல், இரைப்பைக் குற்றம் இவைகள் நீங்குவதோடு, எக்காரணத்தி ஞலோ உடலில் ஏற்படும் சொரி, நமைச்சல், அரிப்பு, புண், புரை கள் நாளடைவில் குணமாகி உடல் தங்க மெருகிட்டதுபோல் பிரகாசிக்கும். மேலும் பெண்கள் மேற்கண்ட விதமே உண்டு வந்தால் சூதக சம்பந்த நோய் கள், மிகச்சூடு, சோம ரோகம் (வெள்ளை படுதல்) கைகாலசதி, எரிச்சல் முதலியவைகளை நீக்கி கர்ப்பாசரத்தைச் சுத்தமாகவும், நல்ல நிலையிலும் வைத்துக்கொண் டிருக்கும். இவர்கள் பெற்றெ டுக்கும் குழந்தைகளான நாட் டின் எதிர்காலத்து மக்கள் அழ காகவும், புத்தி கூர்மையாகவும் பலமுடையவர்களாகவும் நோயற் றவர்களாகவும் இருப்பார்கள். குழந்தைகளுக்கு ஏற்படும் மண் டைக் கரப்பான், கால்கடுவான் என்ற வியாதிகளுக்கு வில்வ இலையின் சிகிச்சை மேலான தாகும்.

மண்டைக்கரப்பான் :—என்ற வியாதி குழந்தைகளின் தலையில் சிறு சிறு கொப்பளங்கள் ஏற்பட் டுப் பின் அதிலிருந்து கசிந்து வடியும் சீழ் ஊணீர் இவைகள் பட்ட இடமெல்லாம் புண்ணுகி அதனுல் குழந்தைகள் அழுயுந் துன்பம் மிக்க பரிதாபமாக இருக்கும். இங்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு முதலில் தலை யிலுள்ள மயிர் யாவையும் ஒட்ட நீக்கி விட்டு பச்சரிசிமாவைக் களிக்கிண்டி அதில் சிறிது தேங் காய் எண்ணெய் சேர்த்துப் பிசைந்து அடையாகச் செய்து முதல் நாள் இரவு குழந்தையின் தலையில் வைத்துக் கட்டி மறு நாள் காலையில் அடையை நீக்கிப் பார்க்கும்போது புண்களிலிருக் கும் சீழ்—ஊணீர் யாவும் அடை யில் சுத்தமாக வந்துவிடும். பின் னர், இலுப்பை அரப்பைச் சுட்டு அரைத்துத் தலையில் தேய்த்து இளம் வெந்நீரில் குளிப்பாட்டி ஈரமில்லாமல் நன்கு துடைத்துச் சுடுசாம்பல் அல்லது விபூதி இவைகளில் ஒன்றைச் சிறு பொட்டணமாகக் கட்டிக் கொண்டு தலையில் ஒத்தி எடுத் தால் புண்களிலிருக்கும் நீர் யாவும் வந்துவிடும். பின்னர் காம்பு நீக்கிய வில்வ இலையைத் தலையில் நிறையவைத்துச் சுத்த மான துணியினுல் தொப்பி மாதிரி கட்டி வந்தால் ஒரு வாரத் தில் குணமடைவதைக் காண லாம். கால் கடுவானுக்கும் இவ் வித சிகிச்சையே பொருந்தும்.

வில்வப் பிசினி :—இதை ஈர மில்லாமல் வெய்யிலில் நன்கு உலர்த்தித் தூள்செய்துகொண்டு இத்தூளின் சம எடைக்கு சீனுக் கற்கண்டுத் தூளையும் சேர்த்து ஒன்றுகக் கலந்து ஒரு சாடியில் வைத்துக்கொண்டு காய்ச்சிய பசும்பால் இரண்டு அவுன்சில் ஒரு தேக்கரண்டி யளவு சேர்த் துக் காலை மாலை ஆகாரத்திற்கு

முன் சாப்பிட்டு வந்தால் சுக்கில சம்பந்தமான சகல குற்றங்களை யும் நீக்கி நல்ல தாது புஷ்டியும், உடல்வனப்பையும் கொடுக்கும்.

வில்வப்பழம் : நல்ல மஞ்சள் நிறமாகப் பழுத்த பழத்தை உடைத்துக் கோதுக்களை நீக்கிச் சிறிது பசும் பாலில் கரைத்துத் தலையில் தேய்த்து அரைமணி நேரம் கழித்து இளம் வெந்நீரில் குளிக்க வேண்டும். இவ்விதம் வாரம் ஒருமுறை குளித்து வந் தால் கண்களில் உள்ள மேகநீர் கம்மம், மறைப்பு, நீர் வடிதல் கண் எரிச்சல் முதலியன நீங்கும். ஆனால், வாத உடம்புக்காரர் களும் சீதள உடம்புக்காரர்களும் தங்களின் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளும் அளவிற்குத் தகுந்த மாதிரி செய்துகொள்ள வேண் டும்.

மேலும், இப்பழத்தைக் கோது நீக்கி அல்லது மூன்று ரூபா எடை பழத்தை நான்கு அவுன்ஸ் பசும் பாலில் நன்கு கரைத்து வடிகட்டி விதைகளை நீக்கிவிட்டு உட்கொண்டால் மூலக்கொதிப்பு, மூலத்தில் இரத்தம் போவது, எம்மருந்திற்கும் வசப்படாத கொடிய சீதபேதி (வயிற்றுக் கடுப்பு) முதலிய ரோகங்கள் ஆச்சரியப்படும்படி குணமாவ தைக் காணலாம். ஆனால், சீத பேதியில் காய்ச்சல் இருக்கும் போது இதைக் கொடுக்கக் கூடாது. அச் சமயங்களில் ஒரு வைத்தியரின் ஆலோசனையின் பேரில் செய்யலாம். வாசக நேயர் களுக்கு இங்கு ஒரு உதாரண மாக உண்மையில் நடந்ததை எழுதுகிறோம். சித்த வைத்தியத் திலோ, வேறு நாட்டு வைத்தியத் திலோ சிறிதும் நம்பிக்கையில் லாத எனது நண்பர் ஒருவர் சீத பேதி நோயால் மிக்க துன்புற் றார். எத்தனையோ வித ஊசி மருந்துகள் இன்னும் என்னென் னவோ செய்தும் குணத்திற்கு வராமல் நோயாளி மிக்க நலி யுற்று விட்டார். நண்பரை நான் பிரதி தினமும் போய்ப் பார்த்து வருவேன். ஆனால் நோய் சம் பந்தப்பட்ட எவ்வித யோசனை யும் சொல்வதில்லை. அவருக்குச் சிகிச்சை கொடுக்கும் வைத்தியர் மிகக் கொடுமையான **கமிலியன் டிசண்ட்ரி** என்று சொல்லி வந் தார். நண்பரின் நிலை பரிதவிக்கக் கூடியதாக இருந்தது. பின், டாக்டரிடம் கலந்து கொண்டு மேலே கண்டபடி வில்வப்பழத் தைப் பாலில் கரைத்து மேற்படி டாக்டரின் மூலம் கொடுக்கப்பட் டது. நோய் நாலாவது நாள் முற்றிலும் குணமாகி விட்டதைக் கண்டு யாவரும் ஆச்சரியப்பட்ட னர். பின் சில மாதங்கள் கழித்து மேற்படி டாக்டரே எனது நண்ப ரிடம் உம்முடைய கொடிய சீத பேதி வியாதியைக் குணப்படுத் தியது உமது நண்பருடைய சித்த மருந்து தான் என்று சொன்ன தன் பேரில் நண்பர் என்னிடம் வந்து ஆச்சரியத்தையும் தனது நன்றியையும் தெரிவித்துக் கொண்டதுடன், சிறிது சிறிதாக சித்த வைத்தியத்திலும் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தார்.

(36-ம் பக்கம் பார்க்க)

சுவை ததும்பும் செய்திகள்

விளையாட்டுக் கொள்ளை !

அண்மையில் சிகாகோ நகரில் ஒரு விளையாட்டுச் சாமான்கள் கடையிலிருந்து 5 நிமிஷத்தில் எவ்வளவு சாமான்களை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு சாமான்களை எடுத்துச் செல்ல 4 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டன. 500 பவுன் (சுமார் 8000 ரூ.) பெறுமான சாமான்களை அக் குழந்தைகள் எடுத்துச் சென்றன. ஒரு போட்டியில் ஜெயித்ததற்காகக் குழந்தைகளுக்குத் தரப்பட்ட பரிசு இது.

வீட்டில் விளையாட சிங்கக் குட்டி !

ரோம் நகரில் உள்ள சமூக ஜனநாயக கட்சித் தலைவருக்கு மிருகங்கள் என்றால் ரொம்பப் பிரியம். அவரது குடும்பமும் பெரிசு. தனது குழந்தைகள் விளையாடுவதற்காக மிருகக்காட்சி சாலையிலிருந்து ஒரு சிங்கக் குட்டியையே வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டார். இரண்டு நாட்கள் சிங்கக் குட்டியைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டிருந்து விட்டு பின்னர் மிருகக் காட்சி சாலையில் கொண்டு விட்டார். நகர சபை கவுன்ஸிலர் ஒருவர் இதைக் கடுமையாக ஆட்சேபித்து சிங்கக் குட்டியை வீட்டுக்கு எடுத்துச் செல்ல இவருக்கு எப்படி மிருகக் காட்சி சாலை அதிகாரிகள் அனுமதி அளிக்கலாம் என்று கேட்டிருக்கிறார். இந்த ரீதியில் போனால் குழந்தைகள் விளையாடுவதற்கு யானையைக் கூட இவர் வீட்டுக்குக் கொண்டு போய்விடுவார் என்று நகரசபை கவுன்ஸிலர் சொன்னார்.

ஐயோ, பாவம் !

கோலாலம்பூரில் பல வியாபாரிகள் மனைவிகளிடமிருந்து சுமார் ரூ. 33000 அடித்துச் சென்றுவிட்ட ஒரு மலாய் பெண்ணை போலீஸார் தேடி வருகின்றனர்.

மேற்கூறிய பெண்கள் தமது கணவர்கள் வீட்டிற்கு வருவதில்லை என்றும் கண்டபடி திரிந்து கொண்டிருப்பதாகவும் முறையிட்டுக்கொண்டார்களாம். அவர்களுடைய கணவர்களைத் திருத்தி வழிக்குக் கொண்டு வருவதாகக் கூறி அவர்களை ஏமாற்றி மலாய் பெண் பணம் பறித்தாளாம்.

கணவர்கள் திரும்புவதற்காகப் பிரார்த்தனை நடத்தப் போவதாகவும், இந்தப் பிரார்த்தனைக் காலத்தில்தான் தனக்குப் பணம் தேவை என்றும், பிரார்த்தனை முடிந்ததும் பணம் திருப்பப்படும் என்றும் மலாய் பெண் கூறினாளாம்.

ஏமாற்றிய மலாய் பெண்ணையோ, அவள் அடித்துச் சென்ற பணத்தையோ இன்னும்

கண்டுபிடிக்க முடியவில்லை. மலாய் பெண் 2 மாதத்திற்கு வாடகைக்கு அமர்த்தியிருந்த அறையில் ஒரு பழைய படுக்கையும் உடைந்து போன சட்டி பானைகளுமே அகப்பட்டன.

13 ரூபாய்க்கு ஒரு கார்!

உல்வர்ஹாரம்டன் என்னும் நகரில் ஒரு கார் விலை 13 ரூபாய்! இம்மாதிரி ஐந்து கார்களை விற்றது ஒரு மோட்டார் கம்பெனி.

தேங்கிக் கிடந்த மிகப் பழைய 'மாடல்' கார்களை விற்றுத் தொலைக்க இப்படிச் செய்யவேண்டியதாயிற்று.

இந்த லட்சணத்தில் தவணை முறையில் பணம் செலுத்தலாமா என்று ஒருவர் கேட்டார். கம்பெனிக்காரர்களுக்குக் கோபம் வந்ததில் வியப்பில்லை.

கொள்ளை மலிவு விலையில் பழைய கார்களைத் தட்டிக் கொண்டு போக ஏராளமான பேர் வழிகள் முதல் நாள் இரவிலிருந்தே கடை வாசலில் பொறுமையுடன் வந்திருந்தனர்.

அபூர்வ சகோதரர்கள்

கேப்டவுனில் இரண்டு சகோதரர்கள். அவர்கள் இரட்டையர்கள். உருவ ஒற்றுமை தவிர அவர்களுக்கு வேறு அபூர்வ ஒற்றுமைகளும் இருந்தன. அவர்களில் ஒருவனுக்கு அப்பெண்டிக்ஸ் ஆபரேஷன் நடந்தது. மற்ற மனிதர்களுக்கு இருப்பது போல் அல்லாமல் சற்று தள்ளியிருந்தது. அவன் அப்பெண்டிக்ஸ் என்பதை சாஸ்திர வைத்தியர் அறிந்தார். அதுகூட விந்தையில்லை. மற்றொரு சகோதரனும் அதே ஆப்ரேஷனுக்கு விரைவிலேயே வரும்படி ஆயிற்று. அவனுக்கும் அந்தப் பாகம் அதே இடத்தில் இருந்தது. அம்மை சுரம் வந்தபோது இரண்டு பேருக்கும் ஒன்றாகவே வந்தது. இருவரும் ஒன்றாகவே பரீட்சைகளில் தேறினார்கள்.

இந்த விந்தை இரட்டையரில் இப்போதுதான் சிறிது வேற்றுமை காணப்படுகிறது. ஆபரேஷனுக்குப் பிறகு பிராங் என்ற சகோதரன் 15 பவுண்டு எடையிழந்திருக்கிறான். கென்னத் என்ற சகோதரனுக்குத் திருமணம் நிச்சயமாகி யிருக்கிறது. மற்றவனுக்கு "ஏற்றவள்" இன்னும் அகப்படவில்லை.

72 வயது மூதாட்டியின் முதல் நாவல்

இங்கிலாந்தில் இராட்சினார் என்ற இடத்தில் வாழும் 72 வயது மூதாட்டி ஒரு நாள், "என் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி விட்டார்களே, சும்மா இருக்கும் வேளையில் நான் ஒரு நாவல் எழுதப்போகிறேன்" என்று சொன்னாள். அவளது ஆறு பிள்ளைகளும் பத்துப் பேரக் குழந்தைகளும் பரிகாசமாகச் சிரித்தனர்.

இன்றும் அவர்கள் சிரிக்கின்றனர் மகிழ்ச்சியோடு. பாட்டி எழு

(அடுத்த பக்கம் பார்க்க).

ஏன் என்னும் கேள்வி !

[மா. தமிழ்ச் செல்வி]

ஏன்? எப்படி? எதற்காக? என்கிற கேள்விகள் மக்களுள்ளத்தில் தோன்றாமல் இருந்தால் மனித சமுதாயத்தில் இதுபோது செழித்து ஓங்கிச் சிறந்து பொலிகின்ற பலவகை முன்னேற்றத்தையும் நாம் கண்டிருக்க முடியாது. ஏன் என்கிற சொல் மிகச் சிறிய சொல். ஆனால் மிகச் சிறந்த கருத்துக்களையும் கருவிகளையும், பொருள்களையும், உலகத்திற்கு அளித்திருக்கின்ற ஒப்பற்ற சொல். ஏன் என்னும் இந்தக் கேள்விக்குறி மட்டும் அறிஞர் தம் உள்ளத்திலும், விஞ்ஞானிகள் தம் எண்ணத்திலும் தோன்றாமலிருந்தால் இஞ்ஞான்று நாம் காண்கின்ற அல்லது கேள்விப்படுகின்ற மாபெரும் நகரங்கள், அந்த நகரங்களுக்கு எழிலும் பயனும் தரும் பெரிய பெரிய சாலைகள், அந்த சாலைகளின் இருமருங்குகளிலேயும் செம்மாந்து நிற்கும் மாடமாளிகைகள், அந்த மாளிகைகளிலே எரியும் மின் விளக்குகள்—சுழலும் மின் விசிறிகள் ஆகிய இவற்றில் ஏதொன்றையும் நாம் பெற்றிருக்க முடியாது. விண்ணிலே வட்டமிடுகிற வானூர்திகள், தண்ணீரிலே மிதந்து செல்லுகின்ற கப்பல்கள், இம் என்னும் முன்னே 20 மைல் 30 மைல் ஓடுகிற ரயில்வண்டிகள், 20000, 30000 பேர்கள் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் சொற்பொழிவு நன்றாகக் கேட்கக் கூடிய வாய்ப்பையும் வசதியையும் தருகிற ஒலி பெருக்கிகள், பல்லாயிரம் கல் தொலைவுக்கப்பால் நடைபெறுகிற நிகழ்ச்சிகளையெல்லாம் நம் வீட்டருகே கொண்டு வந்து நிறுத்துகின்ற வானொலிப் பெட்டிகள் ஆகியவை அனைத்தும் ஏன் என்ற கேள்வியை விளைநிலமாகக் கொண்டு பிறந்தவை அல்லவா?

அறிவியல் அறிஞர் நியூட்டன் ஓர்நாள் மாலை தன்னுடைய தோட்டத்தில் ஆப்பிள் மரத்தடியில் அமர்ந்து இன்னிசை இசைத்துக் கொண்டிருந்தபோது திடீரென்று ஓர் ஆப்பிள் பழம் அவர் தலை மீது விழுந்தது. உடனே அன்னார், **ஏன்** இந்த ஆப்பிள் பழம் கீழே விழுகின்றது. **ஏன்** அது மேலேயே போகக்கூடாது என்று எண்ணிப் பார்த்தார்

(முன் பக்கத் தொடர்ச்சி)

திய நாவல் பிரசுரத்துக்கு ஏற்கப் பட்டு விட்டது! 'பையப் பைய' என்ற அந்த நாவலை எழுதிய பாட்டியின் பெயர் மேரி பைரன். இப்போது அந்தப் பாட்டி நிம்மதியாக எழுதுவதற்கு எல்லா வசதிகளும் செய்து தருகிறார்கள் வீட்டில் உள்ளவர்கள்.

அந்த எண்ணத்தின் விளைவுதான் புவி ஈர்ப்பு சக்தி என்னும் விஞ்ஞானக் கோட்பாடு.

ரைட் சகோதரர்கள் வானத்திலே சிறகடித்துச் செல்லும் பறவைகளைக் கண்ட போது நாமும் ஏன் அவ்வாறு பறத்தலாகாது என்கிற ஆர்வம் கொண்டனர். அந்த ஆர்வம் வளர்ந்து வளர்ந்துதான் மணிக்கு 500, 600 மைல் வேகத்தில் பறந்து செல்லும் வானூர்திகளாக உருவெடுத்திருக்கிறது.

அன்றோர் நாள் ஆங்கில இளைஞர் ஜேம்ஸ்வாட் தேத்தண்ணீருக்காக வெந்நீர் கொதிக்க வைத்துக் கொண்டிருந்த போது குவளையின் மீது மூடியிருந்த தட்டு எழும்பி எழும்பிக் குதித்தது. அது கண்ட அவன் **ஏன்** அந்தத்தட்டு அப்படிக்குதிக்கிறது என்று தன்னுள்ளத்தைக் கேட்டான். அந்தக் கேள்விக்குக் கிடைத்த விடைகள் இன்று உலகெங்கும் ஓடிக்கொண்டிருக்கும் புகைவண்டித் தொடர்கள். மக்களுடைய வாழ்க்கை, மரணத்தால் வதைவதும், நோய்களால் நலிவதும் **ஏன் ஏன்** என்கிற கேள்விகள் இளவரசர் சித்தார்த்தரின் உள்ளத்தை குடைந்து குடைந்து தான் அவரைக் கருணைக்கடல் புத்தராக மாற்றியமைத்தன. அது போலவே அஞ்சாநெஞ்சன் அசோகர் கலிங்கத்துப் போர்க்களத்தில் காமிழந்து, காலிழந்து வேதனைப்பட்ட வீரர்களையும், உற்றார் உறவினரை இழந்து அலறித் துடித்து அழுது புலம்பிய மக்களையும் கண்டு துடித்தார். துடித்த உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது **ஏன்** இந்த நிலை ஏற்பட்டது என்கிற கேள்வி. அந்தக் கேள்விக்குக் கிடைத்த விடை அவருடைய வாழ்க்கையிலேயே ஒரு திருப்பு மையமாக அமைந்தது.

விஞ்ஞானத் துறையிலேயும், சமுதாயத் துறையிலேயும் மட்டுமல்ல; பொருளாதாரத் துறையிலேயும் ஏன் என்கிற கேள்வி மறக்கமுடியாத மாறுதல்களையும், மாபெரும் புரட்சிகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆயிரம் ஆயிரம் மக்கள்வறுமைப் பள்ளத்தில் கிடந்து உழல்வது ஏன்? விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மட்டும் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் உல்லாசவாழ்வு வாழ்வது ஏன்? இந்த இரண்டு கேள்விகளையும் எண்ணிப் பார்த்த பொருளாதார வல்லுனர்கள் உலகிற்கு அளித்த புதிய பாதையே சமதர்மம் என்னும் சிறந்த திட்டம். இந்நாட்டு மக்களில் மிகப் பலர் இனியும் ஏன் உண்ண உணவின்றி, உடுக்க உடையும் இருக்க இல்லமும் இன்றி வருந்த வேண்டும் என்று நம் அரசாங்கம் சிந்தித்தபோது அந்த சிந்தனைக்குக் கிடைத்த முடிவுதான் ஐந்தாண்டுத் திட்டம்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல ஏன் என்னும் கேள்வியை ஆராய ஆராய அதனுடைய சீரும் சிறப்பும் வளர்ந்து கொண்டே போகும். ஆம்! ஏது

(52-ம் பக்கம் பார்க்க)

க்ஷயரோக சிகிச்சை

(காப்டன் என். சேஷாத்திரிநாதன்)

க்ஷயரோகம் இந்தியாவில் ஆண்டு தோறும் ஐந்து லக்ஷம் மக்களை இரையாக்கிக் கொள்கிறது. 25 லக்ஷம் மக்கள் நோய்க்கு வசமாகின்றனர். சமுதாயத்துக்கு உழைக்கக் கூடிய காலமாகிய-பதினைந்து முதல் அறுபது வயது வரை-மக்கள் பலரை இந்த நோய் தாக்கி விடுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னே- இந்த நோயை எதிர்த்துக் குணப்படுத்தும் ஸ்ட்ரப்டொமைசின் மருந்து அவ்வளவு பழக்கத்தில் வாராததால் நோய்க்கு வசமானவர்களிடையே இறப்புத் தொகை மிகவும் அதிகமாயிருந்தது; பிழைத்தவர்கள் மிகக் குறைவு, அப்படிப் பிழைத்தவர்கள் வைத்தியத்திற்குச் செலவு செய்ததும் சம்பாத்திய மில்லாதிருப்பதுமாக இவர்களுடைய பொருளாதார நிலை படுமோசமாயிருந்தது. நோயின் தொத்துதலை நன்கு உணராது நோயாளிக்குச் சிகிச்சைச் செய்தவர்கள் பலரும் நோய்க்கு இரையாய் விட்டனர். ஒரு சில வாலிபர்கள் இந்த நோய்க்கு வசமானதால் தாம் குடும்பத்துக்குத் துயரத்தைக் கொண்டு வரலாம் என்று அச்சமுற்று தற்கொலை செய்து கொண்டவர்களும் உண்டு.

நோயின் கொடுமை

க்ஷயரோகத்தை குணப்படுத்த வைத்தியசாலைகள் நாட்டிலுள்ள நோயாளிகளின் தொகைக்குத் தக்கபடி ஸ்தாபிக்க முடியாமலேயிருந்தது. நோயாளிகள் வைத்தியசாலையில் இரண்டு மூன்று ஆண்டுகளாவது இருந்தாக வேண்டும். அதுவரை அவன் குடும்பம் பட்டினி கிடந்து கையிலிருக்கும் பணத்தையெல்லாம் நோயாளிக்காகச் செலவிட வேண்டி வரும். இவ்வளவு செலவு செய்தும் பயனில்லாமல் நோயாளி இறந்துபோகக் கூடும். பிழைத்து வீட்டுக்கு வந்தும் வேலைக்குச் செல்ல மேலும் ஒன்று இரண்டு ஆண்டுகளாகும். இதற்குள் குடும்பத்தில் மேலும் நபர்கள் நோய்க்கு வசமாகக் கூடும். வைத்தியசாலையிலிருந்து

(51-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் கேள்வியே விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படை; சமுதாய மறுமலர்ச்சியின் விளைநிலம்; பொருளாதார முன்னேற்றத்தின் தோற்றுவாய்; உலக நாகரிகத்தின் கலங்கரை விளக்கு. இவ்வளவு சுவையும் பயனும் மிகுந்த ஏன் என்னும் கேள்வியின் சிறப்பை நம்மில் மிகப்பலர் உணர மறுக்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கும் அதனை உணர்த்துவதே நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய தனி சிறந்த தொண்டாகும்.

திரும்பிய நோயாளி வேலைக்குச் சென்ற பிறகு அவனது உடலில் உள்ளே மெதுவாய்க்கனிந்திருந்த நோய் காற்றுவீசி எரியும் நெருப்பைப்போல உடம்பில் பரவி விடும்.

நோய் உடலைக் கரைக்கும் ஆற்றலுடையதாகையால் அதிகப் போஷாக்கு ஒரு வைத்திய முறையாகக் கருதப்பட்டு, முட்டையும் பாலும் அதிகமாகக் கொடுத்து. நோயாளி நல்ல பருமனுடையவனுகவும் ஆரோக்கியமுள்ளவனுகவும் தோன்றக்கூடும். நோய்க்கனல் ஒன்று எங்கேயோ சுவாசகோசத்திலிருந்து இரணத்தை தோற்றுவித்து இரத்தக் குழாயைத் திறந்துவிடும். இதன் பயனுக, நோயாளி இரத்தம் கக்கி உடனே இறந்து விடுவான்.

பரிகார முறை

நோய்க்கு புதிய பரிகார முறையொன்று கண்டு பிடிக்கப் பெற்றது. இரணத்திற்கு அமைதி கொடுத்து அதைக் குணப்படுத்த முயலுவதுபோல் சுவாசகோசங்களில் இரணத்தை எழுப்பிப் பரவச் செய்யும் க்ஷயரோகத்திற்கு சுவாசகோசத்தையே வேலை செய்ய வொட்டாது சுருங்கிக் கிடக்கச் செய்யலாம் என்று எண்ணப்பட்டது. ஒரு பக்கத்து சுவாசகோசம் மட்டும் நோய்க்கு வசமான நோயாளிக்கு அந்தச் சுவாசகோசத்தைச் சூழ்ந்து நெஞ்சுக்குள் காற்றடைத்தார்கள். நோய் விரைவில் குணமாயிற்று. இந்தச் சமயமெல்லாம் நோயாளி ஒரு சுவாச கோசத்தை கொண்டே சுவாச வேலையைச் செய்து கொண்டிருந்தான். இது போன்ற கடுமையான வேறு சஸ்திர வைத்தியங்களையும் செய்து, சிலரைக்குணப்படுத்த இயன்றது. ஆனுல் பெரும்பாலோர் இறந்து போனுர்கள்.

இப்படி நீண்டகால சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிகள் எவ்வளவு இருந்தாலும், போதாது என்ருயிற்று.

மருந்துகள்

நல்ல வேளையாகச் ஸ்ட்ரப்டோமைசின் மருந்து இலகுவாக வைத்தியத்திற்குக் கிடைத்த பிறகு இந்த வைத்தியசாலை வசதி நெருக்கடி சற்றுக் குறைந்தது. இன்று இந்த நெருக்கடி இல்லாமலே போய்விட்டது. பெரும்பாலோரான நோயாளிகள் வீட்டிலே வைத்தியஞ்செய்து கொள்ளலாம் என்னும் நிலையை ஸ்ட்ரப்டோமைசின் கொண்டு வந்துவிட்டது.

மேலும் எக்ஸ்ரேப் புகைப்படம் எடுத்து நோயின் ஆரம்ப நிலையைக் கண்டுபிடிப்பது வெகு சுலபமாய் விடுகிறது. இவனுல் ஆரம்ப நிலையிலேயே ஸ்ட்ரப்டோமைசின் ஊசி குத்து முறையிலே கொடுத்து சில மாதங்களுக்குள்ளே குணமாக்க இயலுகிறது,

ஐஸோனெக்ஸ் என்னும் மாத்திரையும் க்ஷயரோகத்தை விரைவில் குணப்படுத்தும் மருந்தாகத் தோன்றி இந்த நோய் பழைய நாளில் எழுப்பிக் கொண்டிருந்த

அச்சத்திற்கு நாம் வசப்படுவ தில்லை.

பூரண குணத்துக்கு

நோயை நாட்டிலிருந்து முற்றிலும் ஒழிப்பது சாத்தியமென்ற நம்பிக்கை எழலாம். ஆனால் இதற்கு ஆதாரமில்லை. நோய்க்கு வசமான நபர்களை அறிய சோதனைகளைச் செய்து வருகிறோம். டுபர்குலின் சோதனை இதற்கு வெகுவாகப் பயன்பட்டு வருகிறது. சுவாச கோசங்களுடைய நிலையை அறிய எக்ஸ்ரே சோதனையால் ஆயிரக்கணக்கிலே நகரங்களிலும் மற்று மிடங்களிலும் மக்கள் சோதிக்கப் படுகின்றனர். இதிலிருந்து நோய் பரவியிருக்கும் தொகையை அறிய இயலுகிறது.

நிவாரண நிலயங்கள்

க்ஷயரோக நிவாரண நிலையங்கள் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளன. இதற்காக ஏற்பட்ட மத்திய ஸ்தாபனம் பொக்கிஷம் சேகரித்துச் செலவிடுகிறது. இந்தச் செலவில் ஒரு பங்கு ஸ்ட்ரப்டொமைசின் மருந்தையும் ஐஸொனெக்ஸ் மருந்தையும் வைத்திய சாலைகளுக்கு சிகிச்சைக்காகக் கொடுத்து வருகிறது. நோயாளி இந்த வைத்தியசாலைகளுக்கு வந்து ஆஸ்பத்திரிக்குள் அனுமதிக்கப் படாமலே வைத்தியம் செய்து கொள்ளலாம். சென்னை போன்ற நகரங்களில் ஸ்ரீராம கிருஷ்ண மடம் நடத்திவரும் தரும வைத்திய சாலைகளுக்கும். இந்த மருந்துகளைக் கொடுத்து க்ஷயரோகத்தைக் குணப்படுத்த உதவிக் கொள்வதால், இந்த நோய் பரவுவதை வெகுவாகத் தடுத்துவிடலாம். இத்தகைய முயற்சிகள் இடைவிடாது செய்து வர வேண்டும்.

மருந்துச் சிகிச்சை செய்வதோடு நோயாளியின் சூழ் நிலையாகிய பொருளாதாரம், வீட்டு வசதி, தொழிலாரோக்கியம் முதலியவற்றைச் சீர்திருத்தவும் இந்த ஸ்தாபனங்களுடைய கருத்துச் செல்லவேண்டும்.

நோயும் சூழ்நிலையும்

குழந்தைகட்கு க்ஷயரோகம் தோன்றுவது முதியோருக்குத் தோன்றுவது போலல்ல; கழுத்திலும் நெஞ்சிலும் நெறிகள் தோன்றி இந்த நெறிக் கட்டிகளில் க்ஷயரோகக் கிருமி உள்ளடங்கிக் கிடக்கும். நோய் மெதுவாகக் கனிந்து கொண்டேயிருக்கும். குழந்தையின் உடம்பு வளராமல் தடைபடும். அஸ்திக்காங்கை என்று சொல்லப்படும் நிலையிலே வெகு நாளிருந்து பருவ காலம் வரும்போது பகிரங்க நோயாகத் தோன்றக் கூடும். நோய் மூளையைப் பற்றிக்கொண்டு விரைவில் குழந்தையைக் கொன்றுவிடலாம். ஸ்ட்ரப்டோமைசின் கிடைப்பதற்கு முன்பு இந்தக் குழந்தைகளிடையே நோய் அறியப்படாமலே பரவி யிருந்தது. மான்டோஸ் சோதனை என்னும் முறையைக் கையாண்டு பார்த்ததில் குழந்தைகளிடையே முன்பு எண்ணியிருந்ததைக் காட்டிலும் பன்

மடங்கு பரவி யிருப்பதாய்த் தெரிய வந்திருக்கிறது. இவர்களுக்குத் தக்க சிகிச்சை செய்து குணப்படுத்தியும், இவர்களுடைய சூழ்நிலையைத் திருத்தியும், நோய்க்கு வசமாகாதிருக்கும் குழந்தைகளை மான்டோ முறையைக் கையாண்டு கண்டுபிடித்த பி. ஸி. ஜி. வாக்சினைப் புகுத்தியும் இதற்குப் பிறகு வசமாகாது எடுத்துக்கொள்ளலாம் என்பதையும் உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

குழந்தைகள் விஷயத்தில்

குழந்தைகள் விஷயத்திலே இந்த நோய் எப்படிப் பரவுகிறது. எவ்விதம் இவர்களுக்குச் சிகிச்சை செய்யவேண்டும், எவ்வகையில் நோய் குழந்தைகளிடையே பரவாமல் தடுப்பு முறைகளைக் கையாளலாம் என்றெல்லாம் விரிவாகச் சொல்லியிருக்கும் கட்டுரையின் சுருக்கம் 'ஸோவியத்லாந்து' என்னும் பத்திரிகையில் (தேதி பிப்ரவரி 5) பிரசுரமாயிருக்கிறது. நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களில் அநேகம் இந்தக் கட்டுரையில் இருக்கின்றன.

1925-32 வரை க்ஷயரோகத்திற்கு வசமான குழந்தைகளிடையே இறப்புத் தொகை சராசரி 50 சதவிகிதத்திற்குக் குறைவில்லா திருந்ததாம். இதற்குப் பிறகு ஸோவியத் ரஷியாவில் இந்த நோயைத் தவிர்க்க எடுத்துக் கொண்ட முறைகளாகிய சூழ்நிலைச் சீர்த்திருத்தம், சுகாதார வசதி அபிவிருத்தி, நோயை ஆரம்ப நிலையிலே கண்டுபிடித்துச் சிகிச்சை செய்வது, ஸ்ட்ரப்டோமைசின் போன்ற திறன்மை வாய்ந்த மருந்துகளை உபயோகிப்பது நோயின் கொடுமையைக் குறைத்துப் பெரும் பாலான குழந்தைகள் இறக்காமல் பிழைத்து வருகின்றனவாம். குழந்தைகளிடையே நோய் தொத்துதல் 50 சதவிகிதம் குறைந்து விட்டதாம். சிறு குழந்தைகளுக்கு பி. ஸி. ஜி. வாக்சின் முறையைக் கையாண்டதும் குழந்தைகளிடையே இந்த நோய் தோன்றுதல் குறைந்திருப்பதாயும் சொல்லலாம் என்று இந்தக் கட்டுரை கூறுகிறது.

சிறு குழந்தைகளிடையே வாக்சின் முறையைக் கையாளுவதால் ஒரு குறை ஏற்பட்டிருக்கிறதாம். நோய் தோன்றி இருப்பதைக் கண்டு பிடிக்க, டுபர்குலின் சோதனை முறை பயன் படுவது வாக்சினேஷன் செயததால் தடைபடுகிறதாம். சோதனைக் குறி வெற்றியா யிருந்தால் அது நோயால் நேர்ந்ததா அல்லது வாக்சின் குத்தியதால் நேர்ந்ததா என்று நிச்சயிக்க இயலவில்லையாம். ஆனல் டுபர்குலின் சோதனையைச் செய்யாமலேயே வாக்சினேஷனைச் செய்து விடலாம் என்ற அபிப்பிராயமொன்று இருக்கிறது என்றும் இக் கட்டுரையில் சொல்லப்படுகிறது.

(56—ம் பக்கம் பார்க்க)

இத்தாலி தந்த இணையற்ற செல்வம்

[அ. கலிபன்]

எண்ணற்ற, களிப்பூட்டும் கவிஞர்களையும், கருத்தொளிரும் கலைஞர்களையும் உளங்கவரும் ஓவியர்களையும், உலகிற்குத் தந்த பெருமை உடையது இத்தாலி. இணையற்ற புகழ்கொண்ட அந்த இத்தாலி ஈன்றெடுத்த மைந்தன் தான் உலகப் பெருங்கவி தாந்தே (Dante) அவன் கவிஞன் மட்டுமல்லன்; அமர்புரியும் போர் வீரனுங்கூட எழுதுகோல் பிடித்த காத்தாலேயே இரத்தம் தோய்ந்த வாளினையும் ஏந்தியிருக்கிறான் அவன் வாழ் நாளில். அவன் வாழ்க்கை அழகுதவழ் பூஞ்சோலை அல்ல, கனல் கக்கும் எரிமலை அது. அங்கே அமைதியைக் காணமுடியாது. அடங்காத சூறுவளி ஆரவாரிக்கும். அவனுல் வாழ்க்கையில் அமைதியைக் காண முடியவில்லை. அமைதியைக் காண முடியாமல் ஆக்கியது அவன் பிறந்த பிளாரன்ஸ் நகரம். அவனைப் பெற்றெடுத்த பிளாரென்ஸ் நகரம் அடித்துத் துரத்தவும் பின் வாங்கவில்லை.

தாந்தே வீரப்புகழ்பெற்ற மரபிலே வந்தவன். அவன் தந்தை அலிகெரி என்னும் ஆண்மை வாய்ந்தோன். அவன் தாய் பெல்லா என்னும் அருங்குணப் பெண்மணி. இவர்களுக்கு, 1265–ஆம் ஆண்டு பிறந்தான் தாந்தே. அவனுக்கோர் சகோதரி உண்டு. குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தான். தாய் பெல்லாவின் தக்க பாதுகாப்பில் வளர்ந்தான்.

தாந்தே இளமையில் பெலோஞா, பதுவா (Paduwa) பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றான். அவன் பி. ஏ. பட்டம் பெற்றது பாரிஸ் பல்கலைக் கழகத்தில் ஆகும். தாந்தேயிடம் கல்வி விருப்போடு விடுதலை விருப்பமும் சேர்ந்துதான் இருந்தது. புலவரை விரும்பிய அவன் உள்ளம் போர்வீரரையும் விரும்பியது. வாட்போர், மற்போர் போன்ற வீர விளையாட்டுகளில் தேர்ந்தான்.

அவனுக்கு 24 வயது ஆகையில், அவன் சிறந்த புலவனுகவும், வீரனுகவும் விளங்கினன்.

(55–ம் பக்கத் தொடர்ச்சி)

தக்க மருந்துகளைப் பயன்படுத்தியும் தொத்துதலைத் தடைசெய்ய முயற்சிகளைத் தீவிரமாய்க் கையாண்டும், குழந்தைளிடையே இந்த நோய்க்கு இரை யாகும் தொகையை 100 லிருந்து 25 சத விகிதத்திற்கு ரஷியாவில் கொண்டு வரப்பெற்று விட்டதாம். இது ஒரு பெரும் வெற்றிதான்.

—‘தினமணி.’

கம்பால்டினே என்ற போரில் குதிரைப் படை செலுத்தி வெற்றி பெற்றான்.

கவிஞன் தாந்தேயின் அக வாழ்வை நோக்கின் அது கண்ணீர் சொரியும் காட்சியாகத்தான் இருக்கும். அவன் சிறு வயதிலேயே பியாட்ரிக்ஸ் என்பாளைக் காதலித்தான். ஆனால் அவள் தன் 24-ஆம் வயதில் மண்ணுலகை விட்டு மறைந்தாள். மனமுடைந்தான் தாந்தே. அவன் வாழ்க்கையில் ஏமாற்றத்தின் முதற்படி இது. அவளைப்பற்றி விடாநியூவா (Vitanevova) என்னும் நூலில் தாந்தேயே கூறுகிறார்.

பியாட்ரிக்ஸ் பிரியவும், தாந்தே ஜெம்மா என்பாளை மணந்தான். அவளோ அலங்கார விரும்பியாக, யாரையும் இழிவாக மதிக்கும் அகங்காரங் கொண்டவளாக வாழத்தலைப் பட்டாள். தாந்தே இதைக் கண்டு உள்ளம் தளர்ந்தான். இனிமையைத் தேடிச் செல்லும் இல்லறத்தில் அவன் கசப்பைத்தான் காணமுடிந்தது.

1300ம் ஆண்டில் அவன் பிளாரென்ஸ் நகர நீதிபதியாக வந்தான். அவன் உள்ளமோ அடிமை வேலை செய்யும், அந்த அரசாங்கப் பணியை விரும்பவில்லை. அவன் விடுதலையை நாடினான். பெரும் பெரும் செல்வர்கள் குழுமிய இடம் பிளாரென்ஸ் நகரம். அவர்களுடைய செல்வச் செருக்கையும், பதவிச் செருக்கையும் கண்டு தாந்தே வெறுத்தான். செல்வர்களிடம் அடிமைப்பட்டுத் திணறுகின்ற எண்ணற்ற ஏழைகளின் இதயத் துடிப்புகள் அவன் காதுகளில் ஒலித்தன. அவர்கள் படுந்துயரைக் கண்டு துயரக் கண்ணீர் உகுத்தான் தாந்தே.

அப்பொழுது போப்பாண்டவரின் அக்ரம ஆட்சி கோர தாண்டவம் ஆடியது அங்கே. மதத்தின் பெயரால் வஞ்சகச் செயல்கள் நடைபெற்றன. போப்பின் அகங்காரப் போக்கு தாந்தேயிக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

அச்சமயம் பிளாரென்ஸ் நகரமே அல்லோல கல்லோலப் பட்டது. அமைதி நிலவிய பிளாரென்ஸ் நகரத்தில் ஆரவாரம் எழுந்தது. வாள்கள் மின்னவிட்டன. துப்பாக்கிக் குண்டுகளின் சத்தம் காதுகளைத் துளைத்தது. எழில்விளங்கும் பிளாரென்ஸ் நகர் வீதிகள் இரத்தக் கறை படிந்தன. ஆம் கெல்கப் என்னும் கட்சிக்கும், கிபெல்லீன் என்னும் கட்சிக்கும் போட்டி வளர, முடிவில் கெல்கப்கட்சி நகராட்சியைத் தன் வசம் ஆக்கிக் கொண்டது. அன்றையிலிருந்து நகர மக்கள் இருபிளவாகப் பிரிந்தனர். ஏன் நகரமே இரண்டாகப் பிரிந்தது. கெல்கப் கட்சியார் இருக்கும் பகுதி நெரி என்றும், கிபெல்லீன் கட்சியார் இருக்கும் பகுதி பியன்ஷி என்றும் பிரிந்தது. நெரியர் போப்பினைப் போற்றி அவரை ஆதரிப்போர். பியன்ஷியரோ “ அரசியலில் மத சம்பந்தமே கூடாது ” என்னும்

அதற்கு மாமுன கொள்கை உடையவர்கள். இவ்வாறு இரு வருக்குமிடையில் பகை வளர்ந்தது.

பகைமுற்றி, கலகம் ஏற்பட, நீதிபதி தாந்தே இருகட்சித் தலைவர்களையும் நாடு கடத்தினான். இதைக்கண்ட நெரியரோ "தாந்தே நடுநிலைமை இல்லாதவன். பியன்ஷியர் கட்சியை ஆதரிப்பவன்" என்று கூக்குரல் இட்டனர். ஒருசமயம் தாந்தே ஊரில் இல்லாதபோது, அவ்வூர் மற்றோர் அதிகாரி பியுன்ஷியர் தலைவனை நகரத்திற்கு வரவழைத்து விட்டார். இதைக் கண்ட நெரியர், இதுதான் சமயம் என்று "தாந்தே சூழ்ச்சிக்காரன் போப்பின் பரம விரோதி, பியன்ஷியரோடு சேர்ந்து கொண்டு போப்புவைக் கொல்ல சதி செய்கிறான்" என்ற பழிகளைச் சுமத்தினர். பிளாரென்ஸ் நகரில் நெரியரின் ஆட்சி வலுத்தது. தாந்தே மீது சீற்றங்கொண்டனர் நெரியர். அவனுடைய சொத்துக்களை எல்லாம் பறித்துக்கொண்டனர். அதோடு மட்டுமல்ல. வெளியூர் சென்ற தாந்தேயை மீண்டும் நகருக்குள் நுழையவிடாது தடுத்து அவனைத் துரத்தினர்.

மக்களால் துரத்தப்பட்டு மறைந்தொளிந்தான் தாந்தே. மீண்டும் ஒரு படையை திரட்டிக் கொண்டு பிளாரென்ஸ் நகர்மேல் படையெடுத்தான். ஆனால் அவன் முயற்சி வெற்றி அளிக்கவில்லை. தோற்று மறைந்தோடி விட்டான் தாந்தே. மேலும் சீற்றங்கொண்ட நெரியரோ அவன்மேல் ஒற்றர்களை ஏவினர். அவனோ ஊர் ஊராகத் திரிந்தான்.

எனினும் உறுதி தளராமல் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்ட நண்பர்களைத் தூண்டி வந்தான். அடிக்கடி அவன் எண்ண முகில்களிலே மின்னவிடும் அவன் தாய் நகரம் பிளாரெனஸ். "என்னருமைப் பிளாரென்ஸ நகரமே நீ பெற்றெடுத்த மைந்தனை நீயே துரத்தி விட்டாய். உன்னை என் கவிதை மலர்களாலே அணி செய்யவேண்டும் என்றெண்ணியிருந்தேன். இருப்பினும் என் உடலை உன் மண்ணிலே சாய்க்க வேண்டும் என்றாசைப்பட்டேன். நீயோ என்னை வெறுத்துத் தள்ளி விட்டாய். நீ துரத்தி அடித்தாலும், என்னால் உன்னை மறக்க முடியவில்லை. நீதியற்று ஆட்சி புரியும் பேயர்களுக்கிடம் தந்து, நேர்மையுடன் ஏழைகளுக்காக வாழ்கின்ற என்னைத் துரத்தியதேன்" என்று மனம் குமுறினான். இவற்றையெல்லாம் அவன் தான் எழுதியுள்ள "கான்விடோ" என்னும் நூலில் கூறுகிறான்.

ஊர் ஊராகச் சுற்றி, நாடு நாடாகச் சுற்றி முடிவில் ராவென்னா நகருக்கு வந்தான். அங்கே அதன் அதிபன் இதோ என்னும் புலவன் தாந்தேயோடு நட்பு கொண்டான். அங்கேதான் தாந்தே சற்று அமைதியைக் கண்டான். அங்குதான் தாந்தே தான் தொடங்கிய கவிதைகளை எல்லாம் பாடி முடித்தான்.

அவன் கவிதைப் புகழ் அகில மெல்லாம் பரவியது. அதைக் கண்ட பிளாரென்ஸ் நகர மக்கள் மீண்டும் தாந்தேயை வருமாறு அழைத்தனர். அவனும் உடன் பட்டு பிளாரென்ஸ் நகர் நோக்கி வந்தான். ஆனால் நெரியர் " நீ போப்பிற்கு விரோதமாகப் புரட்சி காரியங்களிலெல்லாம் ஈடு பட்டாய். ஆதலின் அதற்கெல் லாம் அபராதம் கட்டிவிட்டு, இனி அவ்வாறு செய்வதில்லை என்று உறுதி கூறி நுழைக" என்றனர். " நான் செய்தது எதுவும் தவறில்லை. என் தாய் நகரத்தில் நுழைய ஏன் இந்த நிபந்தனைகள் " என்று கூறி ராஸன்னு சென்றுவிட்டான். அங்கே 1321 ஆம் ஆண்டு தாந்தே இறந்தான். அவன் இறந்த ராஸன்னு நகரிலேயே அவ னுடைய சமாதி கட்டப்பட் டது.

தாந்தேயின் உள்ளம் புரட்சி மணம் வீசும் ஒரு பூங்கா. அவன் எழுதிய நூல்கள் இனிக்கும் அமுதிலே தோய்த்தெடுக்கப்பட் டவை. ஆனால் அவன் வாழ்வோ சோகவண்ணம் பூசப்பட்ட பரி தாப ஓவியம். அவன் இயக் குமுறல்கள் யாவும் அவன் எழுத திய நூல்களிலே ஒலிக்கும். அவனை அடித்துத் துரத்திய மக் களே அவன் இறந்தபின் அவன் சமாதியைக் கண்ணீர் பெருக்கிக் கழுவினர். இத்தாலிய அறிஞர் களின் வரலாற்று வானில் தாந்தே மங்காத துருவ நட்சத்திரம். அவன், **இத்தாலி தந்த இணை யற்ற செல்வம் !** —' மன்றம் '

நக்கீரர் கழகம், சென்னை

டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பு

டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பு, சென்னை நக்கீரர் கழகச் சார்பில் 13-6-'59 முதல் ஒவ்வொரு சனிக் கிழமையும் பிற்பகல் $3\frac{1}{2}$ மணி முதல் $4\frac{1}{2}$ மணி வரை சென்னைப் பெத்துநாய்க்கன் பேட்டை, 27 கொண்டயைர் தெருவிலுள்ள 'தமிழகம்' என்னும் கட்டடத்தில் நடைபெறும்.

திரு. ஆர். எஸ். பங்கயச் செல்வி (தமிழ் ஆசிரியர், கல்யாணம் பெண்கள் உயர்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை) அவர்களால் 'சிலப்பதிகார' வகுப்பும், திரு. எஸ். கௌதமி தேவி, எம்.ஏ., பி.டி., (தமிழ் விரிவுரையாளர், மாகாணக் கல்லூரி, சென்னை) அவர்களால் 'புறநானூறு' வகுப்பும் நடைபெறுகின்றன. ஒரு சனிக்கிழமை சிலப்பதிகாரமும், மற்றொரு சனிக்கிழமைப் புறநானூறும் மாறி மாறி நடைபெறும்.

குறித்த காலத்தில் மகளிர் அனைவரும் வந்து பயன்பெற வேண்டுகிறேன்.

அனசூயா மோகனசுந்தரம்,
துணைச்செயலாளர், நக்கீரர் கழகம்

பாதை போடும் கலை

'அப்ரேல்'

வேகமாக ஓடும் ரெயில் வண்டியில் நாம் சென்றுகொண்டிருக்கும்போது, கடக்-கடக், கடக்-கடக் என்று தாளம் போடுவது போல் வண்டிச் சக்கரங்களின் சப்தம் கேட்கிறதே; இது எதனுல் உண்டாகிறது தெரியுமா? தண்டவாள இணைப்புக்களில் சக்கரங்கள் இடிப்பதால்தான். நாம் அடிக்கடி ரெயில் பிரயாணம் செய்திருப்போம். சாளமாக ஓடும் வண்டியில் செல்லுவது இதனுல் நமக்குச் சகஜமாகப் போயிருக்கலாம். ஆனுல், சட்டென்று வண்டி குலுங்குமானுல் ஏதாவது விபரீதம் நேர்ந்துவிட்டதோ என்று நமக்குச் சந்தேகம் தோன்றும்.

தண்டவாளத்தில் வேகமான வண்டிகள் சாளமாக ஓடவேண்டுமானுல், ஒவ்வொரு தண்டவாளத் துண்டையும் மிகவும் திறமையாகவும் ஜாக்கிரதையாகவும் பதிக்க வேண்டும். ரெயில் பாதை போடுவதற்கு நிரந்தரமான ஊழியர் கூட்டம் ஒன்று இருக்கிறது. அந்த ஊழியர் கூட்டம் புதிய பாதை ஒன்றைப் போடும்போது சில நாள் வரைக்கும் அவர்களோடு கூட இருந்து பார்ப்போமானுல், எவ்வளவு நிபுணத்துவத்துடனும் அப்பழுக்குச் சொல்ல முடியாதபடியும் தண்டவாளங்களை அவர்கள் பதிக்கிறுர்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

புதிய பாதை ஒன்றைப் போடுவதற்கு முன் பூர்வாங்கமாக ஏராளமான வேலை செய்யவேண்டி இருக்கிறது. பாதை அமைப்பதற்குத் தகுந்ததாக நிலத்தைத் திருத்த வேண்டும். மரங்களை வெட்டிக் காட்டை அழிக்கவேண்டும். பாதைக்கு மேடு அமைக்க வேண்டும். பாதையில் மேடு பள்ளங்கள் இல்லாதபடி சமன் செய்யவேண்டும். சில இடங்களில் பாதையை வெட்டவேண்டியிருக்கும்; சில இடங்களில் மேடிட்டு உயர்த்தவேண்டியிருக்கும். நிலம் திருத்தும் வேலை யெல்லாம் முடிந்து, பாதை அடித்தரையைச் சரியான முறையில் அமைத்துவிட்டால், அடுத்தபடியாகத் தண்டவாளத் துண்டுகளைப் பதித்து, அவற்றை இணைக்க வேண்டியதுதான்.

எஞ்சினீர்கள், இன்ஸ்பெக்டர்கள், மேஸ்திரிகள், கூலியாட்கள் எல்லாரும் வந்து தண்டவாளம் பதிக்கத் தொடங்குமுன், தளவாடங்களும் கருவிகளும் வந்து சேரவேண்டும். இந்தத் தளவாடங்களைச் சுமந்துகொண்டு ஒரு ரெயில் வண்டி அந்த இடத்துக்கு மிகச் சமீபமான ஒரு முனை வரைக்கும் வரும். அந்தச்

சாமான்களையெல்லாம் வெளியே எடுத்து உபயோகிக்கத் தயாராய் அங்கே வைத்துக்கொள்வார்கள்.

அமைப்புக் குழு (ஃபார் மேஷன்காங்) என்ற ஒரு கூட்டம் முன்னதாகப் பாதை மேட்டைச் சமன் செய்து ஒழுங்கு படுத்திக்கொண்டே போகும். அப்படித் தயார் செய்த பாதை மேட்டில், 'ஸ்லீப்பர் குழு' என்ற அடுத்த கூட்டம் ஸ்லீப்பர் என்ற தண்டவாள அடிக் கட்டைகளைப் பரப்பிக்கொண்டு போகும். 36 அடி நீளமுள்ள தண்டவாளத் துண்டுகளைப் பதிக்கவேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அப்போது ஒவ்வொரு தண்டவாளத் துண்டுக்கும் 14 அல்லது 15 அடிக் கட்டைகள் விகிதம் பதிக்கவேண்டும். தண்டவாளத் துண்டுகளின் இணைப்புக்கு அருகே உள்ள முதல் இரண்டு அடிக் கட்டைகள் மட்டும் ஒன்றுக்கொன்று 2 அடி 5 அங்குல தூரத்தில் இருக்கவேண்டும். மற்றவையெல்லாம் ஒன்றுக்கொன்று 2 அடி 8 அங்குல தூரத்தில் இருக்கவேண்டும். தண்டவாளத் துண்டுகளின் நீளத்துக்கு ஏற்றபடி இந்த அடிக்கட்டை இடைவெளிகளின் தூரமும் மாறும். பாதை மேட்டின் மேற்புறத்தில் சாம்பரைப் பரப்பியிருப்பார்கள். அதற்கு மேலேதான் அடிக் கட்டைகளைப் பரப்பியிருப்பார்கள். சுமார் மூன்று தண்டவாளத் துண்டுகளின் நீளத்துக்கு ஒரே தடவையில் அடிக் கட்டைகளைப் பரப்புவார்கள்.

தண்டவாளம் பதிக்கும் குழு அடுத்தபடி வருகிறது. மூன்று தண்டவாளத் துண்டுகளை ஏற்கனவே இணைத்துப் பாதையின் ஒரு பக்கத்தில் அடிக் கட்டைகள்மீது அவற்றை அந்தக் குழுவினர் வைக்கிறார்கள். அலங்கோலமாக அப்படிக் கொண்டு வந்து போட்டுவிடமாட்டார்கள். ஏறக்குறையச் சரியான பதிப்பிடத்திலேயே வைப்பார்கள். ஏனென்றால், இந்த வேலையைச் செய்யும் ஆட்களும் ஸூப்பர் வைஸர்களும் நல்ல நிபுணர்கள். இதற்குப் பின் தச்சர்கள் தங்கள் தூரப்பணங்களுடன் வருவார்கள். ஒவ்வோர் அடிக் கட்டையிலும், தண்டவாளத் துண்டின் இரண்டு பக்கங்களிலும் தொளை போடுவார்கள். பிறகு சம்மட்டியாட்கள் வந்து, 'டாக்ஸ்பைக்' என்ற பிடிப்புக்களை அறைந்து, அடிக்கட்டையோடு தண்டவாளத்தைப் பதிய வைப்பார்கள். தண்டவாளத்துக்கு உட்புறமும் வெளிப்புறமும் இந்தப் பிடிப்புகளை அறைவார்கள். சில ரெயில் பாதைகளில் இந்தப் பிடிப்புகளுக்குப் பதிலாக 'ரெயில்ஸ்க்ரூ' என்ற திருகாணிகளைச் செருகுவார்கள். பிடிப்புக்களைத் தண்டவாளத்தோடு ஒட்ட அறையாமல் சிறிது இடம் விட்டிருப்பார்கள். இரண்டு தண்டவாளங்களுக்கும் நடுவில் உள்ள 'கேஜ்' என்ற தூர அளவைச் சரிப்படுத்தவும் 'அலைனிங்' (சீர்) செய்யவும்

வசதியாகவே இப்படி இடம் விடு கிறார்கள்.

எதிர்ப் பக்கத்துத் தண்ட வாளத்தைப் பதிக்கும்போது தான் இன்னும் ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டும். இரண்டுக்கும் நடுவே இன்ன தூரந்தான் இருக்கவேண்டும் என்ற நிர்ணயம் உண்டு. இந்தியாவில் இது பெரும்பாலும் 5 அடி 6 அங்குல மாகும். இந்தத் தூர அளவைச் சரி பார்க்க 'ரெயில் கேஜ்' என்ற கருவியை உபயோகிக்கிறார்கள். 'பாரலல்' ஆக, அதாவது சம தூரத்தில் மறு தண்ட வாளத் துண்டுகளை வைத்து, இரண்டு தண்டவாளங்களுக்கும் இடைப்பட்ட தூரத்தை இந்தக் கருவியைக் கொண்டு அளந்து சரி பார்க்கிறார்கள். இப்படிச் செய்த பின் எதிர்ப் பக்கத்துத் தண்ட வாளத் துண்டுகளையும் முன் போலவே பிடிப்புகளையோ திருகாணிகளையோ கொண்டு அடிக் கட்டைகளில் பதிய வைப்பார்கள்.

இந்த வேலைகளெல்லாம் நடந்து கொண்டிருக்கும்போதே பின்னால் மற்றொரு கூட்டம் (காங்) வந்துகொண்டிருக்கும். 'க்ரோ பார்' என்ற கடப்பாறைகள், 'ஷவல்ஸ்' என்ற மண்வெட்டிகள், 'பிக்' என்ற கோடாரிகள் இவற்றோடு அந்தக் கூட்டத்தினர் வருவார்கள். பதித்த தண்ட வாள அடிக் கட்டைகளுக்குக் கீழே கற்களையும் மணலையும் திணித்துப் பலமாய்க் கெட்டிப் பார்கள். இதற்குப் 'பாலஸ்டிங்' என்று பெயர். தேவையான ஆழத்துக்கு, தேவையான அளவு இருக்கும்படி இப்படிக் கல், மணல் களைக் கெட்டிப்பார்கள். ஏனென்றால், சில நாளைக்கெல்லாம் பல்லாயிரக் கணக்கான டன்கள் நிறையுள்ள எஃகு யந்திரமான என்ஜின்கள் இந்தத் தண்டவாளங்களின்மீது ஓடத் தொடங்கி விடும். அப்போது அந்த 'ஸ்ட்ரெஸ்', 'ஸ்ட்ரெயின்' என்ற பாரத்தையும் அழுத்தத் தையும் இவை தாங்கவேண்டும் அல்லவா?

பருவ நிலை சௌகரியமாக இருந்தால், நாள் ஒன்றுக்குக் கால் மைல் தூரம் இப்படித் தண்டவாளம் பதிக்கும் வேலைகளையெல்லாம் பூர்த்தி செய்து விடுகிறார்கள். இன்னும் விரைவாக வேலை நடக்க வேண்டுமானால் அதிக கோஷ்டிகள் வந்து உழைக்கும்.

சகஜமாக உபயோகிக்கலாம் என்று அறிவித்துப் புதிய ரெயில் பாதையைத் திறப்பதற்கு முன், மிக நன்றாகவும் எச்சரிக்கையாக வும் தணிக்கை செய்வார்கள். கட்டைகளின் இடைவெளி கணக்கா யிருக்கிறதா என்று பார்ப்பார்கள்.

தண்டவாளத் துண்டுகளின் இணைப்புக்களை விரிந்து சுருங்கப் போதியபடி கணக்காக இடைவெளி விட்டு அமைத்திருக்கிறார்களா என்று கவனிப்பார்கள். தண்டவாளங்களுக்கு இடையிலே உள்ள சம தூரம்சரியா

யிருக்கிறதா என்று பார்ப்பார்கள். தரை மட்டம் (லெவல்) சரியா என்று அளப்பார்கள். அடிக் கட்டைகளுக்குக் கீழே கல், மணல்களைத் திணித்தது போதுமா என்று கவனிப்பார்கள். இப்படியெல்லாம் ஜாக்கிரதையாய் அமைத்த ரெயில் பாதை, வேகமான — பாரமான— வண்டிகள் தன்மீது இரவு பகல் எந்நேரமும் ஓடக்கூடிய உறுதியும் பலமும் பெற்றிருக்கும். ஒரு பருவம் அல்ல, மறு பருவம் அல்ல; ஒருநாள் அல்ல, ஒரு வாரம் அல்ல; எல்லாப் பருவத்திலும், எல்லா நாளும் இருபத்தைந்து வருட காலம் இப்படி வண்டிகள் அதிலே ஓடலாம். நிரந்தர ஊழியர்கள் கவனித்துக் கொண்டு, அவ்வப்போது ஏதோ சில பழுதுகளை மட்டும் பார்த்து வந்தால் போதும்.

ரெயில் பாதை போட வேண்டிய இடம் சமதரையான பிரதேசமாக இருந்து, எவையோ ஒன்றிரண்டு மாங்களை மட்டும் வெட்டவேண்டி யிருக்குமானல், பாதை மேட்டை அமைக்கும் எஞ்சினீர்களுக்கு அதிருஷ்டந் தான். ஆனல், இப்படிப் பூமாதேவி அந்த எஞ்சினீர்களிடம் கருணை காட்டுவதில்லை. இருபத்தைந்து மைல் தூரம் பாதை மேடு அமைப்பதற்குள்ளேயே பெருந் தடைகள் எதிர்ப்படும்; வாய்க்கால்களும் ஆறுகளும் குறுக்கிடும். அவற்றுக்குக் 'கல்வர்ட்' டுகள், பாலங்களெல்லாம் கட்டவேண்டும். குன்றுகள் வந்தால், அவற்றுக்காகப் பாதையைச் சுற்றி வளைத்து வெட்டிச் செல்லவேண்டும்; அல்லது மலைப் பாதை (டன்னல்) வெட்ட வேண்டும். வளைவுகள், ஏற்ற இறக்கங்கள், பூமியின் மேற்படை அடுக்குகள் (ஜியலாஜிக்கல் ஸ்ட்ராட்டா) இவற்றையெல்லாம் ஏற்றபடி சமாளிக்கவேண்டும்.

தண்டவாளத் துண்டுகளை இணைக்கும் இடத்தில் 'ஃபிஷ் பிளேட்' என்ற சட்டத்தைத் திருகாணி கொண்டு முடுக்குவார்கள். இப்படிக் கடைசித் தண்டவாளத் துண்டையும் இணைத்துத் தணிக்கை யெல்லாம் முடிந்த பிறகு, புதிய பாதை தயாராகி விடும். ரெயில் வண்டிகள் அதில் ஓடலாம். ஆனல் அவை அப்படி ஓடத் தொடங்கு முன்பு, கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்டர் அப் ரெயில்வேஸ் என்ற அதிகாரி சில உயர்தர ரெயில்வே எஞ்சினீர்களையும் கூட அழைத்துக் கொண்டு வருவார். விரிவான பரீட்சைகளெல்லாம் நடக்கும். புதிய பாதை முற்றும் பத்திரமானது என்று அந்தச் சர்க்கார் இன்ஸ்பெக்டருக்குத் திருப்தி ஏற்பட வேண்டும். ஏற்பட்டுவிட்டால், அதில் வண்டிகள் ஓட அவர் அநுமதி கொடுத்து விடுவார்.

மஞ்சரி

ரஷியாவின் ராக்கெட் சந்திர மண்டலத்தை அடைந்தது

சனியன்று புறப்பட்டு திங்கள் அதிகாலை திங்களை அடைந்தது

விநாடிக்கு 7 மைல் வேகத்தில் சென்றது

ரஷியா அனுப்பிய சந்திரலோக ராக்கெட் 14-9-59 காலை 2–32 மணிக்கு சந்திரனை அடைந்தது. சனிக்கிழமையன்று பிற்பகல் சுடப்பட்ட இந்த ராக்கெட் விநாடிக்கு 7 மைல் வேகத்தில் சென்றது. இதற்கு லூனிக் 2. என்று பெயரிடப்பட்டுள்ளது.

"சந்திரனில் ரஷ்ய சர்க்காரின் சின்னம் இறங்கி விட்டது. இதை எவரும் சிதைக்க முடியாது" என்று மாஸ்கோவிலிருந்து அறிவிக்கப்பட்டது.

சந்திரனை அடையும் வரை "லூனிக் 2" ராக்கெட்டிலிருந்து சமிக்ஞை ஒலி வந்த வண்ணம் இருந்தது. பிறகு அது நிலவை அடைந்ததும் சமிக்ஞை நின்று விட்டது.

சமிக்ஞைகள் நின்றதும் ரேடியோ தொலை நோக்கு நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனே நிருபர்கள் இந்த விஞ்ஞான சாதனையை அகில உலகிற்கும் அறிவிக்க விரைந்தனர்.

நிலவை அடைவதற்கு 20 நிமிடத்திற்கு முன்பு இருந்து சமிக்ஞைகளை ரேடியோ ரிசீவர் கருவி பெறவில்லை. இதற்குப் பதில் ஒரு எக்ஸ்பிரஸ் ரயிலிலிருந்து கிளம்பும் சத்தம்தான் கேட்டது.

ரஷ்யப் பிரதமர் குருஷேவ், அமெரிக்காவுக்குச் செல்ல உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இது ரஷ்யாவிற்குப் பெரும் வெற்றியை அளித்திருக்கிறது.

மகத்தான செய்தி

நேரு பாராட்டு

"இந்தச் செய்தி உண்மையிலேயே மகத்தானது. சந்திரனுக்குச் சேதம் ஏதும் ஏற்படாது என்று நம்புகிறேன்" என்று நேரு இது குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"பழங்கால ஜோதிடங்களில் நிலவு, மனிதனின் விதியைப் பாதிப்பதாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ முற்றிலும் மாறி விட்டது. பாவம்! சந்திரனை மனிதன் தொடர்ந்து செல்கிறான்" என்று கூறினார்.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.